விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 25 சனிக்கிழமை (10.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 234

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# படைத்தரப்பினர் மீது சர்வதேச விசாரணை!

## முயற்சி நடப்பதாக கோத்தா சந்தேகம்

வெலிவேரிய சம்பவத்தைப் பயன்படுத்தி படைத்தரப்பினர் மீது சர்வதேச போர்க் குற்ற விசாரணை நடத்த வேண்டும் என விடுக்கப்படும் கோரிக்கைகளை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)



# வடக்கு வேட்பாளர்களிடம் விசாரணை நடத்தப்படுகிறது

## ஐ.தே.கட்சி முறைப்பாடு

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. பாதுகாப்பு அமைச்சுப் புலனாய்வுப் பிரிவினரும், பொலிஸாரும் தமது வேட்பாளர்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி, தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளது.

எதற்காகத் தேர்தலில் போட்டியிடுகின்றீர்கள் என வேட்பாளர்களிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க் கட்சியினரை அச்சுறுத்த அரசாங்கம் (19ஆம் பக்கம் பார்க்க)

# நாடு திரும்புமாறு கோரிக்கை

பிரித்தானியாவில் சட்டவிரோதமான முறையில் தங்கியுள்ள இலங்கையர்களை சுயவிருப்பத்துடன் நாடு திரும்புமாறு, பிரித்தானியாவின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் ஜோன் ரென்கின் கோரியுள்ளார்.

இதற்காக விசேட சுயாதீனவேலைத்திட்டம் ஒன்றை பிரித்தானிய அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

அவ்வாறு சுயாதீனமாக பிரித்தானியாவில் இருந்து வெளியேறுகின்ற சட்டவிரோத குடியேறிகளுக்கு, மீண்டும் பிரித்தானியாவுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுமா? என்ற (19ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் காணிகளை அவர்களிடமே ஒப்படையுங்கள்

## விஜித ஹேரத் கோரிக்கை



(கொழும்பு)

வடக்கில் தமிழ் மக்களின் காணிகள் அவர்களுக்கு மீள வழங்கப்பட வேண்டுமென ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

காணி என்பது அசையா சொத்தாகும். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஒருவரின் காணியையும் அரசாங்கம் சுவீகரித்துள்ளது. இவ்வாறான ஓர் நிலையில் சாதாரண மக்களின் நிலை பற்றி சொல்லத் தேவையில்லை.

வடக்கில் சிங்கள மக்களை குடியேற்றினால் தமிழ் மக்களின் சந்தேகம் வலுப்பெறும்.

இது வயிற்றில் குண்டு கட்டி தாக்குதல் நடத்தும் அளவிற்கு வளர்ச்சியடைக்கூடும். எனவே வடக்கு தமிழ் மக்களின் காணிகள அவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களுக்கு காணிகளை வழங்காது ஏ9 வீதியை அமைப்பதில் (19ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனின் பெயரை அரசே கூடிய தடவை உச்சரித்துள்ளது

## ஏதோவொரு சக்தி உண்டு-அரியம் எம்.பி

யுத்தம் முடிவடைந்து 4 வருடங்களாகிவிட்ட போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை விட அரசாங்கமே விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயரை அதிகமாக உச்சரித்துள்ளது. அதிலிருந்தே அந்தப் பெயரில் ஏதோவொரு சக்தி இருக்கிறது என்பது புலனாவதாக மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற வடக்கில் நிலவும் காணிப் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அரியநேத்திரன் எம்.பி. இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்,

காணி என்பது மக்களின் அடிப்படைப் பிரச்சினையாக இருக்கிறது. ஆனால், கொங்கிரீட் வீதிகள் போட்டுவிட்டால் சமாதானம் வந்துவிட்டது என்பது தான் அரசின் நினைப்பாக இருக்கிறது. ஆனால் உண்மை நிலைமை அதுவல்ல. உரிமைக்காக போராடி முள்ளிவாய்க்காலுடன் அது முடிவுற்று நிற்கிறது.

விடுதலைப்புலிகளின் தலைவர பிரபாகரனின் பெயரை நாம் உச்சரிக்காவிட்டாலும் யுத்தம் முடிவடைந்து கடந்த 4 வருடங்களில் அரசாங்கமே இந்த பாராளுமன்றத்தில் அதிகமாக அந்தப் பெயரை கூறி வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை விட அரசாங்கமே பிரபாகரனின் பெயரை அதிகம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. இதிலிருந்தே (19ஆம் பக்கம் பார்க்க)

# நாகை மீனவர்கள் இன்று போராட்டம்

இலங்கை கடற்படையை கண்டித்து தமிழகத்தின் நாகப்பட்டினம் மீனவர்கள் இன்று படகில் கறுப்புக் கொடி கட்டி நடுக்கடலில் போராட்டம் நடத்தவுள்ளனர்.

நாகை மற்றும் காரைக்காலை சேர்ந்த 65 மீனவர்கள் கடந்த 30-ம் திகதி மாலை கோடியக்கரை கிழக்கே (20ஆம் பக்கம் பார்க்க)

# சர்வாதிகார அரசிற்கு எதிராக நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்

## ஐக்கிய சக்தி அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

குடிநீர் கேட்ட நாட்டின் அப்பாவி மக்கள் மீது மனிதாபிமானமின்றி துப்பாக்கி சூட்டை நடத்தி கொலை செய்த சர்வாதிகார ராஜபக்ஷ ரெஜிமெண்டுக்கு எதிராக நாடு முழுவதும் பாரிய எதிர்ப்பு சக்தி ஒன்றை கட்டியெழுப்ப போவதாக ஐக்கிய சக்தி அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி உட்பட அரசியல் கட்சிகள், சர்வமத அமைப்புகள், சிவில் அமைப்பு, வெகுஜன அமைப்புகள் என பல சமூக அமைப்புகள் இணைந்து இந்த ஐக்கிய சக்தி என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந்த அமைப்பு நாடு முழுவதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த ஏற்பாடுகளை செய்துள்ளதுடன் முதலாவது எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு எதிரில் நடத்தப்பட உள்ளது.

மனித உயிர்களை மதிக்காது, நிராயுத பணிகளான மக்களை ஈவிரக்கமின்றி கொலை செய்து, சர்வாதிகார இராணுவ [illegible] நாட்டில் கட்டியெழுப்பிவரும் ஆட்சியாளர்களுக்கு எதிராக மனிதாபிமானத்தை மதிக்கும் அனைவரும் கறுப்பு ஆடைகளை அணிந்து அன்றைய தினம் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஐக்கிய சக்தி அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கொலைகார ஆட்சியில் இருந்து மீள வேண்டுமாயின் மக்கள் ஒரே பாதையில் ஐக்கியமாக ஒன்றிணைய வேண்டும். இதன் மூலமே அதனை வெற்றிகரமாக செய்ய முடியும் என அந்த அமை[illegible]

# ரூ.10 இலட்சம் பெறுமதியான ஆபரணங்கள் திருட்டு

## இருபாலையில் திருடர்கள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.இருபாலைப் பகுதியில் உள்ள வீடொன்றில் சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த திருட்டுச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் குறித்த வீட்டின் உரிமையாளரான ஜயாத்துரை ஜெயதேவி என்பவரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில், வீட்டிலிருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தபோது வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் சுமார் 10 இலட்சம் பெறுமதியான 18 பவுண் தங்க நகைகளையும் சுமார் ஒரு லட்சம் பெறுமதியான வெள்ளி ஆபரணங்களையும் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரன் தெரிவிற்கு கனேடிய தமிழர் பேரவை வரவேற்பு

வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக சி.வி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டமையைக் கனேடியத் தமிழர் பேரவை மகிழ்வோடு வரவேற்றுள்ளது.

இது தொடர்பில் கனேடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பெயர்பெற்ற வழக்கறிஞராக விளங்கி உயர் நீதிமன்ற நீதவானாகத் திகழ்ந்து இன்று அரசியலுக்கு வந்திருக்கும் விக்னேஸ்வரன் பல்லாண்டு காலச்சட்ட அனுபவத்தைக் கொண்டிருக்கிறார்.

இறையாண்மைச் சட்டம், உள்நாட்டுச் சிக்கல்களைக் கையாளும் திறன் மற்றும் உலகெங்கும் உள்ள தமிழரோடு இணைந்து செயற்படும் இவரது ஆற்றல் என்பன வேறு எந்தவொரு முதலமைச்சர் வேட்பாளரோடும் ஒப்பிட முடியாதளவு உயர்ந்து நிற்கிறது.

சட்ட வல்லமை மட்டுமல்லாது தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் குரல்கொடுக்கும் செயற்பாட்டாளரான இவரது தெரிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அதன் செயற்பாடுகளையும் பலப்படுத்தும் என்பதில் கனேடியத் தமிழர் பேரவை பெரும் நம்பிக்கை கொண்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விக்னேஸ்வரனின் தலைமையில் எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவிருக்கும் வட மாகாண சபைத் தேர்தல் நியாயமானதாகவும் சுயாதீனமானதாகவும் நடைபெற்றால் பெரும் வெற்றியீட்டுவர் என்பதில் ஐயமில்லை எனக் கனேடியத் தமிழர் பேரவையின் தேசியப் பேச்சாளர் டேவிட் பூபாலபிள்ளை அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் ஓர் காத்திரமானதும் தெளிவானதுமான செய்தியைத் தெரிவிக்க வட மாகாணத் தமிழர் அனைவரும் தங்கள் மக்களாட்சி உரிமையைத் தவறாது பயன்படுத்தி இத்தேர்தலில் வாக்களிக்க வேண்டுமெனக் கனேடியத் தமிழர் பேரவை வேண்டுகோள் விடுக்கிறது.

அத்தோடு உலகெங்கும் பரந்து வாழும் தமிழர் அனைவரும் தங்களால் இயன்ற அனைத்துப் பங்களிப்பையும் விக்னேஸ்வரனுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வழங்க வேண்டுமெனவும் கனேடியத் தமிழர் பேரவை வேண்டுகோள் விடுக்கின்றது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-1)

# தி.மு.க போராட்டத்திற்கு நாராயணசாமி கண்டனம்

தி.மு.க உட்பட சில கட்சிகள் மத்திய அரசை கண்டித்து போராட்டம் நடத்துகின்றன. அவர்களால் இலங்கை தமிழர்களையோ ஒரு போதும் காப்பாற்ற முடியாது என மத்திய அமைச்சர் நாராயணசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் நாராயணசாமி நேற்று விமானம் மூலம் சென்னை சென்றடைந்தார்.

அவ் விமான நிலையத்தில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

இலங்கை தமிழர் பிரச்சினை, தமிழக மீனவர்கள் சிறை பிடிப்பு போன்ற சம்பவங்களில் ஒரு போதும் மத்திய அரசு அலட்சியமாக நடந்து கொள்ளவில்லை.

ஆனால் தி.மு.க உட்பட சில கட்சிகள் மத்திய அரசை கண்டித்து போராட்டம், மறியல் நடத்துகின்றன.

இவர்களால் இலங்கை தமிழர்களையோ, தமிழக மீனவர்களையோ ஒரு போதும் காப்பாற்ற முடியாது.

அவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இலங்கை தூதரை அழைத்து கண்டனம் தெரிவித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (செ-1)

# இறுவட்டு வெளியீடு

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வெளியீட்டுக் குழுவினால் வெளியிடப்படும் எம் தாயே முத்துமாரி இசைப்பாடல் இறுவட்டின் முதற்பாகத்தின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலய மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வெளியீட்டு நிகழ்வில் விருந்தினர்களாக நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார்,

தொழிலதிபர் எஸ்.பி.சாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளனர்.

இவ் இறுவெட்டு இசைப்பாடல்களுக்கான பாடல்வரிகளை கவிப்புலவர் வேலணையூர் சுரேஸ், இசையை முரளி ஆகியோர் வழங்கியுள்ளனர். (அ-5)

# இன அடையாளங்கள் பாதுகாப்பாக உள்ளன

## ஜனாதிபதி மகிந்த உரை

நாட்டை பயங்கரவாதத்தில் இருந்து விடுவித்ததன் ஊடாக சகல மக்களினதும் இன அடையாளங்கள் பாதுகாக்கப்பட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உலக பழங்குடிகளின் தினத்தை முன்னிட்டு தெஹியத்தகண்டிய ஹேனானிகல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவத்தில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதம் முடிவுக்கு வந்ததுடன் சிதறி கிடந்த வேடுவ மக்கள் ஒரே சமூகமாக ஒன்றிணைந்து தமது அடையாளங்களை வெளிப்படுத்தி சுதந்திரமான வாழ்க்கைச் சூழலுக்குள் செல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

சுதந்திரத்தை அனுபவித்து வரும் இந்த வேடுவ மக்கள் நவீன அபிவிருத்தியின் பங்காளிகளாக மாறியுள்ளனர்.

வேடுவமக்களின் சகல தேவைகளையும் நிறைவேற்றுவதில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டு வருகிறது.

வேடுவமக்களின் வாழ்க்கை மிகவும் கஷ்டமான நிலையில் இருப்பதாக சிலர் சர்வதேசத்திற்கு அறிக்கையிட்டாலும் அந்த மக்களின் வாழ்க்கை முறைமைக்கு அமைய வாழ இடமளிக்காத காரணத்தினாலேயே அவர்களின் வாழ்க்கை கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கின்றது என்றார். (செ-1)




## நல்லூர்க் கந்தன் மஹோற்சவம்

# 200 லோட் மணல் பரவ மாநகர சபை நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சூழலில் 200 லோட் மணல் பரவ யாழ்.மாநகர சபை நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தனின் மஹோற்சவத்திற்கு வருகை தரும் பக்தர்களின் நன்மை கருதி மணல் பரவும் நடவடிக்கையினை யாழ். மாநகரசபை மேற்கொண்டு வருகின்றது.

வருடா வருடம் ஆலயச் சுற்றாடலில் மணல் பரவும் நடவடிக்கையினை யாழ்.மாநகர சபை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

# இலங்கையில் தினமும் 113 வாகன விபத்துக்கள்

தினமும் காலையில் வீடுகளில் இருந்து வெளியில் செல்வோரில் 61 பேர் மீண்டும் வீடு திரும்புவதில்லை என போக்குவரத்து பொலிஸ் தலைமையகத்தின் அதிகாரி சேனக்க கமகே தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு போக்குவரத்து குறித்து தெளிவூட்டும் கருத்தரங்கில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தினமும் சராசரியாக 113 வாகன விபத்துக்கள் நிகழ்கின்றன. இவற்றில் தினமும் 6 பேர் கொல்லப்படுகின்றனர். 55 பேர் காயமடைகின்றனர்.

காலையில் வீட்டில் இருந்து செல்வோரில் 61 பேர் மீண்டும் வீடு திரும்புவதில்லை. இந்த நிலைமை நாட்டுக்கு பெரும் சுமையாக உள்ளது.

வடமேல் மாகாணத்தின் தும் மலசூரிய பொலிஸ் பிரிவில் கடந்த ஆறு மாதங்களில் நடந்த வாகன விபத்துக்களில் 69 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த பிரதேசத்தில் பலர் முச்சக்கரவண்டிகளையும் மோட்டார் சைக்கிள்களையும் பயன்படுத்துகின்றனர். [illegible] செல்லும் போது மிகவும் கவனமாக வீதியை பயன்படுத்த வேண்டும். சில சாரதிகள் மிகவும் குழப்பமான நிலைமையில் வீதியில் வாகனங்களை ஓட்டிச் செல்கின்றனர்.

இதனால் காலையில் வீட்டில் இருந்து வெளியில் செல்பவர்கள் மீண்டும் வீடுகளுக்கு திரும்புவார்களா? இல்லையா? என்ற நிலையற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்தளவில் தற்போது வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன என்றார். (செ-11)

ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின்

28வது குருபூசை நிகழ்வு

காலம் : 2013.08.12 திங்கட்கிழமை
நேரம் : முற்பகல் 10.00 மணி
இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்
சொற்பொழிவு : ஆறுமுகமான பொருள்
வழங்குபவர் : திரு. ஐ. சண்முகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்)
விசேட நிகழ்வு : சுவாமி அவர்களால் பாராயணம் செய்யப்பட்ட அருணாசல அட்சரணமாலை இறுவட்டு வெளியீடு இடம்பெறும்.

அன்றைய தினம் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் காலையில் இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆச்சிரமத்தில் அறுபத்து மூவர் குரு பூசையுடன் நிகழ்வு முற்றுப் பெறும்.


- சந்நிதியான் ஆச்சிரமம் -

(3579)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 06:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.



(3473)

நல்லூர் பாம் சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளையார் இன்

இன்று முதல் அதிவிசேட 25% விலைக் கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவை யுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு:

✔ தோசை (உருளைக் கிழங்கு கறியுடன்) ரூபா 80/-
✔ மசாலா தோசை (உருளைக் கிழங்கு கறியுடன்)
மசாலாபூரி சப்பாத்தி (உருளைக் கிழங்கு கறியுடன்)

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

C-4259

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஆசையும் அதிகாரமும்

ஒரு ஊரிலே மன்னன் இருந்தார்.

அவர் அயலில் உள்ள தேசத்துடன் படையெடுக்க வேண்டு மென்று நினைத்துக் கொண்டார். அந்த இடத்தையும் தனது நாட்டுடன் சேர்த்துக் கொள்ள வேண்டு மென்பது அவரது ஆசை. எப்போதுபடையெடுக்கலாம் என்று யோசனை செய்தார்.

இப்படியாக யோசனை செய்து கொண்டிருந்த சமயத்திலே ஒரு பெரியவர் அவரைத் தேடிவந்தார். "என்ன மன்னா யோசனை?" என்றார்.

மன்னர் தனது யோசனையைச் சொன்னார்.

இந்த வேளையிலே மன்னருக்குத் தாகம் எடுத்தது. தண்ணீர் குடிக்க வேண்டும் போல் இருந்தது. உடனே அரண் மனை பணியாளரைக் கூப்பிட்டார்.

"போய் எனக்கு தண்ணீர் கொண்டுவா" என்று சொன் னார். அவர்சென்று ஒருகுவளையிலேதண்ணீர் கொண்டு வந்து ராஜாவிடம் கொடுத்தார். ராஜா அதை வாங்கி குடிப்பதற்காக வாய்க்கருகில் கொண்டு சென்றார்.

அந்தநேரத்திலே, "மன்னா... சற்றுபொறுங்கள்!" என்று அந்தப் பெரியவர் சொன்னார். ஆவலோடு தண்ணீரைப் பருக வாய்க்கருகில் கொண்டு சென்ற மன்னன் அப்படியேநிறுத்திக் கொண்டார்.பெரியவரை பார்த்தார்.

உடனே அந்தப் பெரியவர் சொன்னார்.

"மன்னா இப்போது உங்களை விட வலிமையுள்ள ஒரு சக்தி உங்களுக்கு தண்ணீர் கொடுக்க மறுக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படியென்றால் இப்போது ஒரு குவளை தண்ணீரை என்ன விலைகொடுத்து வாங்கு வீர்கள்?" என்று கேட்டார்.

"இப்போது எனக்கு இருக்கும் தாகத்திற்கு... என்னுடைய அரசாங்கத்திலே பாதியையாவது கொடுத்து இந்த தண் ணீரை வாங்கத் தயங்கமாட்டேன்" என்றார்.

"சரி இப்போது கையிலுள்ள தண்ணீரை பருகுங்கள்" என்றார் பெரியவர்.

மன்னர் ஆவலாக தண்ணீரை பருகி முடித்தார். சற்று நேரம் கடந்த பின்னர் மறுபடியும் இந்தப் பெரியவர் பார்த்துக் கேட்டார், "மன்னா... நீங்கள் ஒரு குவளை தண்ணீரை குடித்து முடித்து விட்டீர்கள்.... இப்போது அந்தத் தண்ணீர் வெளியில் வரக்கூடிய பாதை அடைப்பட்டு போய்விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை வெளியேற்றுவ தற்கு நீங்கள் எவ்வளவு செலவு செய்வீர்கள்? என்று கேட் டார்.

மன்னர் யோசித்தார். "அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், என்னுடைய அரசாங்கம் பூராகவும் அதற்கு ஈடாக தரவும் தயங்க மாட்டேன்" என்றார்.

இப்போது அந்தப் பெரியவர் சொன்னார் "எந்த அரசாங் கத்தின் மதிப்பு ஒரு குவளை தண்ணீர் அளவுக்குக்கூட இல்லையோ அந்த அரசாங்கத்தை அடைய வேண்டுமென்ற பேராசையில் மனிதர்கள் தங்களுடைய சகோதரர்கள் கூடவே சண்டையிடுகிறார்களே... அதிலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?" என்றார்.

மன்னருக்கு இப்போதுதான் அர்த்தம் புரிந்தது. மனதிலே தெளிவு உண்டானது. தன் மனதிலே உண்டான வெறியை விரட்டி அளித்தார். அதன்பின் நிம்மதியாக ஆட்சி செய்தார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# வடக்கில் மோசடி கும்பல் அதிகரிப்பு; மக்களை விழிப்புடன் இருக்க கோரிக்கை

(கரணவாய்)

நகை மோசடியில் கொள்ளைக் கும்பல்கள் வடக்கிலும் கிழக்கிலும் இயங்கி வருவதனால் பொது மக்களை விழிப்புடன் இருக்குமாறு நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி பீடோ வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மோசடிக்காரர்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அதிகரித்துள்ளனர். இவர்கள் மக்களையும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களையும் ஏமாற்றி வருகின்றனர்.

இவ்வாறான மோசடிக்காரர்களை இல்லாதொழிப்பதற்கு மக்கள் விழிப்புடன் செயற்பட்டு மோசடிக்காரர்கள் தொடர்பான தரவுகளை பொலிஸாருக்கு வழங்க வேண்டும்.

அத்தோடுஅண்மையில்நெல்லியடி மக்கள் வங்கியில் போலி நகையை அடகுவைக்க வந்தவர்களை வங்கியாளர்களின் உதவியுடன் பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதி மன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களை விசாரணை செய்த போது கிளிநொச்சியை சேர்ந்த ஒரு பெண்ணும் வேறு இடங்களைச் சேர்ந்த மூன்று ஆண்களும் நகை மோசடியில் ஈடுபட்டமை தெரிய வந்தது.

அத்துடன் மேற்படி பெண்ணால் 50 போலி தாலிக்கொடிகள் உட்பட பல ஆபரணங்கள் அரச வங்கிகளிலும் தனியார் வங்கிகளிலும் மற்றும் கடைகளிலும் 68 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகைக்கு அடகு வைத்தமை போன்ற விடயங்களை கைதானவர்கள் மூலம் அறியமுடிகின்றது.

எனவே பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்றும் மோசடிக்காரர்கள் தொடர்பில் உடன் பொலிஸாருக்கு தகவல் வழங்க வேண்டுமெனவும் நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார். (அ-9-60)

# நல்லூரான் கொடிச்சீலை இன்று எடுத்து வரப்படும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கொடியேற்றத்தை முன்னிட்டு இதற்கான கொடிச்சீலை ஆலயத்திற்கு எடுத்து வரும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது கொடிச்சீலை திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள வைத்தியர் ந.சத்தியமூர்த்தி இல்லத்திலிருந்து கந்தையா தர்மகுலசிங்கத்தினால் எடுத்துவரப்பட்டு சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள கொடித்தேர் மடத்தில் முருகப் பெருமானுக்கு விசேட பூசைகள் இடம்பெற்று சித்திரத்தேரில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆலய பிரதான சிவாச்சாரியாரிடம் கையளிக்கப்படவுள்ளது. (அ-5)

# வீட்டின் மீது கல்வீச்சு; நபர்களுக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் மதுபோதையில் இருந்த நபர்கள் வீடொன்றுக்கு கல் எறிந்து அட்டகாசம் புரிந்த இரு நபர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சம்பவதினம் குறித்த இரு நபர்களும் மது போதையில் வீடொன்றுக்கு கல் எறிந்து தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டனர் என நெல்லியடிப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டு வழக்குப் பதியப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த இரு நபர்களையும் தொடர்ந்து 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-9-24)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 120 | 100 |
| தக்காளி | 30 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 70 | 120 | 100 |
| கரட் | 120 | 140 | 160 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 120-140 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 120 |
| பாகற்காய் | 90 | 60 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | — | 100 |
| பயற்றங்காய் | 60 | 80 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 30 | 60 | 60 |
| கறிமிளகாய் | 60 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 30 | 160 | 80 |
| போஞ்சி | — | 100 | 140 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 30 |
| தேசிக்காய் | 160 | 250 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30-40 |
| இராசவள்ளி | — | 120 | 120 |

# இராசி பலன்

10.08.2013
(ஆடி 25, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
திருதியை காலை 6.07 மணிவரை
சதுர்த்தி பின்னிரவு 5.49 மணிவரை
உத்தரம் பின்னிரவு 2.01 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை
சுபநேரம் 3.04-4.34 மணிவரை
நாக சதுர்த்தி விரதம்

**மேடம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்** மனமகிழ்ச்சியோடு செயற்படும் நாள், பூர்வ புண்ணிய காரியங்களில் அக்கறை காட்டுவீர்கள், கனவு நனவாக கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கடகம்** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், முயற்சிகள் எளிதில் கைகூடும், சுவாரஸ்யமான நாள், போசன சுகமுண்டு.

**சிங்கம்** தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், விருந்தினர் வருகை விருப்பத்தை நிறைவேற்றும், வாக்கு மேன்மையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், முயற்சிகளுக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** பணப்புழக்கம் இருந்த போதிலும் அடுத்தடுத்த செலவுகள் ஏற்படலாம், அலைச்சல்கள் அதிகரிக்கும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும், பயணங்களால் பலனுண்டு, மதிப்பும் மரியாதையும் உயர்வடையும் நாள்.

**தனுசு** புதிய பொருட்சேர்க்கையுண்டு, குடும்ப ஒற்றுமை கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உற்றார் உறவினர் உங்கள் முன்னேற்றத்தை கண்டு ஆச்சரியப்படுவர்.

**மகரம்** குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றலாம், வருமானம் பெருக வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்** கவலைகள் தீர கார்த்திகேயனை வழிபட வேண்டிய நாள், சில எதிர்ப்புக்களைச் சந்திக்க நேரிடலாம், வேலைச்சுமை கூடும், போசன சுகமுண்டு.

**மீனம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், கௌரவமான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்புக்கடிக்கு இலக்காகி குடும்பஸ்தர் மரணம்

(சாவகச்சேரி)


கொடிகாமம் மழவராயன் காட்டுப்பகுதிக்கு தேன் எடுக்கச் சென்ற குடும்பஸ்தர் பாம்புக் கடிக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.


இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

தேன் எடுப்பதற்காக நேற்று வெள்ளிக் கிழமை அதிகாலை குறித்தநபர் காட்டுப் பகுதிக்கு சென்றுள்ளார். இதன்போது புடையன் பாம்புக்கடிக்கு இலக்காகி, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் பாலாவி வடக்குப் பகுதியைச் சேர்ந்த கனகசிங்கம் சர்வானந்தம் (வயது - 27) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பிரேத பரிசோதனைக்காக உடல் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-9-29)




# கடல்வாழ் உயிரின வளர்ப்புத் திட்டம்; வியட்நாம் அரசு தொழில்நுட்ப உதவி

## வியட்நாம் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**கடல்வாழ் உயிரின வளர்ப்புத்திட்டத்திற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்க வியட்நாம் அரசாங்கம் முன்வந்துள்ளதாக அந்நாட்டின் இலங்கைக்கான தூதுவர் தொன் சிங்ஹறா தங்ஹறா தெரிவித்துள்ளார்.**



யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்.ரில்ஹோ சிற்றி ஹோட்டலில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கம் வியட்நாம் அரசாங்கத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையின், அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் கடற்றொழிற்றுறையை அபிவிருத்தி செய்யும் வாய்ப்பை அதிகரிக்கும் நோக்குடனும் மூன்று பாரிய திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியுடனும் வியட்நாம் அரசாங்கத்தின் தொழில்நுட்ப உதவியுடனும் இந்த மூன்று திட்டங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் வலைப்பாடு, கிராஞ்சி பகுதியும் யாழ். மாவட்டத்தில் வேலணைதுறையூர் பகுதியும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடற்பாசி வளர்ப்புத் திட்டம், சிங்கறால் வளர்ப்புத்திட்டம், கடலட்டை வளர்ப்புத் திட்டம் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன.

காலப்போக்கில் இத்தொழில் நவடிக்கையை முன்னெடுக்க ஏதுவான இடங்களில் இப்பாரிய மூன்று திட்டங்களும் இலங்கை பூராகவும் மேற்கொள்ளப்படவுள்ளன.

வியட்நாம் நாட்டில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வெற்றிபெற்ற திட்டத்திற்கு ஏற்ற கடற்பிரதேசத்தை சார்ந்ததாக மேற்படி அடையாளப்படுத்தப்பட்டுள்ள மூன்று இடங்களும் உள்ளதால் இதனைத் தெரிவு செய்ததாகவும் இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் இத் திட்டங்களும் வெற்றிபெறும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதவிர இந்தத் திட்டத்தில் இணைந்து வருமானம் ஈட்டக் கூடிய தொழில் நடவடிக்கையில் ஈடுபட தொழில் முயற்சியாளர்கள் முன்வர வேண்டும்.

ஏற்கனவே தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் இணைந்து கொள்ளமுடியும்.

மேலும் பல இலட்சம் ரூபா பணத்தை ஒரு சில மாதங்களில் இலாபமாக ஈட்டக் கூடியனவாக இத் திட்டங்கள் உள்ளன.

இத்திட்டத்திற்கென வியட்நாம் நாட்டிற்கு வந்து பயிற்சி பெற்ற இலங்கையைச் சேர்ந்த நான்கு பேர் செயற்படவுள்ளதாகவும் இதில் இருவர் வடமாகாணத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித்தார்.

இதுதவிர இந்தத் திட்டத்திற்கு இலங்கை அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளதாகவும் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த உதவி வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கையிலிருந்து வியட்நாம் நாட்டிற்கு சென்று பயிற்சி பெற்றுவந்த வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சலிபன் டி.மேரியன், பாலசந்திரன் நிருபராஜ் ஆகியோரும் பங்கு கொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

குறைவருமானம் உடையவர்களை நிறை வருமானம் பெற வைப்பதே இத்திட்டத்தின் நோக்கம் எனவும் தெரிவித்தனர். (அ-6)

# தலைவா திரைப்படத்திற்காக தறிகெட்டு ஆடிய ரசிகர்கள்



திரையரங்கில் திரைப்படம் பார்ப்பதற்காக ஒன்றுகூடிய இளைஞர் பட்டாளம் வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தியதோடு, தகராறுகளிலும் ஈடுபட்டனர்.

இச் சம்பவம் நேற்று காலை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள திரையரங்கில் இடம்பெற்றுள்ளது.

இவ் இளைஞர் பட்டாளம் மணிக்கணக்கில் வீதிப் போக்குவரத்திற்கும் அருகிலுள்ள நகை வியாபார நிலையங்களுக்கும் இடையூறு ஏற்படுத்தி நடனம் ஆடினர்.

குறித்த திரையரங்கில் திரைப்படம் ஒன்று நேற்றைய தினம் திரையிடப்பட்டது.

இத் திரைப்படத்தை பார்வையிட வந்த இளைஞர் பட்டாளம் வீதியின் கரைகளில் வாழை மரங்களை கட்டியும் கர்ப்பூரம் கொளுத்தியும் ஆரவாரப்பட்டனர். இதன்போது பாண்ட் வாத்தியமும் இசைக்கப்பட்டு இளைஞர்கள் குத்து நடனத்திலும் ஈடுபட்டனர்.

தலைகளில் துணிகளை கட்டிக்கொண்டு முற்றிலும் தமிழ்ப் பாரம்பரியத்திலிருந்து மாறுபட்டவர்களாக அங்கு கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர் என சம்பவத்தை நேரில் கண்ட முதியவர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் படுகிற பாட்டிற்கு ஒருவேளை சாப்பிடக் கூட கஷ்டமா இருக்கு. உதுகள் என்னடாவென்டால் நடு வீதியில் நிண்டு எந்த சிந்தனையும் இன்றி படம் பார்த்தாலும் பரவாயில்லை ஏன் இப்பிடி மன்மத ஆட்டம் போட்டு சீரழிகுதுகள்" என வருத்தத்துடன் தெரிவித்தார்.

இச்சம்பவத்தால் அங்கு நீண்டநேரம் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டதனையும் அவதானிக்க முடிந்தது.

இளைஞர் பட்டாளம் திரையரங்கிற்கு வெளியே வீதியில் நின்று ஆரவாரம் செய்தமையால் அங்கிருந்த வர்த்தக நிலையங் களின் வியாபாரமும் பாதிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணப் பொலிஸார் இது தொடர்பில் [illegible] நடவடிக்கை எடுக்க வேண்டுமென [illegible] (அ-4-6)

# மண்பாதை அமைப்பதை தடுத்தால் மக்களை திரட்டி ஆர்ப்பாட்டம்

## இருசபைகள் எச்சரிக்கை

தொண்டைமானாறு கடல் நீரேரிக்கு குறுக்காக மண்பாதை அமைப்பதற்கு அரச அதிகாரிகள் தடையாக இருந்தால் மக்களின் ஆதரவுடன் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என வல்வெட்டித்துறை நகரசபையும், கோப்பாய் பிரதேச சபையும் எச்சரித்துள்ளன.

மக்களின் நலன்களில் யார் குறுக்கீடு செய்தாலும் அவர்களுக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவோம் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

செல்வச்சந்நிதி தொண்டைமானாறு கடல் நீரேரிக்கு குறுக்காக மண்பாதை அமைப்பது தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் சந்திபொன்று நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ். ஊடக மையத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பில் வலி.கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் கே.ரமேஸ், வல்வெட்டித்துறை நகர [illegible] ஆனந்தராஜ் ஆகியோர் கலந்து கொண்டு மேலும் தெரிவிக்கையில்,

செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் தற்போது கொடியேறியுள்ள நிலையில் காலாகாலமாக அமைக்கப்பட்டு வரும் இப் பாலத்தை சில அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து அரச அதிகாரிகள் அமைக்கவிடாது தடுத்து வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் இதற்கான பணிகளை மேற்கொண்டபோதே, அரச அதிகாரிகளுடன் குறித்த பகுதிக்கு வந்த அச்சுவேலிப்பொலிஸார் பாலத்தை அமைக்கும் நடவடிக்கைகளுக்கு தடையேற்படுத்தியுள்ளனர். இப்பாதையை ஒன்றரை இலட்சம் மக்கள் வரையில் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில இப்பாதையை அமைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமையானது மக்கள் விரோத நடவடிக்கையாகவே பார்க்கவேண்டியுள்ளது.

மேலும் இந் நடவடிக்கைக்கான முட்டுக்கட்டையாக உள்ளூராட்சி மன்றத்தால் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களினூடாக மக்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமே தவிர இதன் மூலம் அரசியல் நடத்தக்கூடாது என்றனர். (அ-4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் அட்டை அச்சிடுதல் தொடர்பில் ஐ.தே.க. கேள்வி

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர் தலுக்கான வாக்காளர் அட்டை அச் சிடும் பணிகள் உரிய பாதுகாப்பு விதி முறைகளுக்கு அமைவாக மேற் கொள்ளப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டை அச்சிடுதல் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளை அரசாங்க அச்சகம் பின்பற்றத் தவறியுள்ளது. இந்த நிலைமை சந்தேகத்தை ஏற்படுத் தும் வகையில் அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தேர்தல் தொடர் பான சகல அதிகாரங்களும் தேர் தல் ஆணையாளருக்கே காணப்ப டுகின்றது என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இதற்குப் பதிலளித்துள்ளார். (அ-2)

# பொது இடத்தில் மது அருந்தியமை: நபருக்குஆட்பிணை வழங்கியது மன்று

பருத்தித்துறை பொலிஸாரினால் பொது இடத்தில் வைத்து மது அருந்தியதாக குற்றஞ் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட நபரொருவரை 15 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி வழக்கு விசாரணை கடந்த புதன் கிழமை பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது குற்றஞ் சாட்டப்பட்ட நபர் தான் சுற்றவாளியென தெரிவித்து மதுபானசாலையிலேயே தான் மது அருந்தியதாகவும் பொலிஸார் தன்னை பொல்லால் தலையில் தாக்கி காயப்படுத்தியதாகவும் மன்றில் தெரிவி த்தார்.

இதனையடுத்து குறித்த நபரை அடுத்த தவணைக்கு சட் டத்தரணியூடாக மன்றுக்கு வந்து வாதிடு மாறும் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்லுமாறும் நீதவான் உத்தரவிட்டார். (அ-9-24)


நம்பிக்கையீனமா? மனத் தளர்வா?

## தற்கொலை எண்ணமா?

உங்களுக்கு யாருமே இல்லை என்ற வெறுமையா?
வாழ்க்கையில் வெறுப்பா?
உங்களுக்குக் கைகொடுக்க நாங்கள் காத்திருக்கின்றோம்.

உங்களை விளங்கிக் கொள்ளவும் உங்களை உள்ளவாறே ஏற்றுக் கொள்ளவும் எம்மால் முடியும். உங்களை நாம் ஆதரவுடன் செவிமடுப்போம். உடனே அழையுங்கள் அல்லது நேரில் வாருங்கள்.

(காலை 9 மணி முதல் மதியம் 01 மணிவரை)

(3558)

**கை கொடுக்கும் நண்பர்கள் :** (Srilanka Sumithrayo)

**தொலைபேசி: 021 222 8117**

(உங்கள் இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்)


## பரத நிருத்திய அரங்கேற்றம்

காலகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில் இடம்பெறும் விதுஷா விஜயகுமாரனின் பரத திருத்திய அரங்கேற்ற நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல. 63, யாழ். இந்துக் கல்லூரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகமுன்னாள்துணை வேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் , சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சுகந்தினி ஸ்ரீ முரளிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-5)


## திவ்விய மஹோற்சவம்



மன்னார் மாவட்டம்
நானாட்டான் செல்வ முத்து
மாரி அம்மன் திருக்கோயில்
ஞாயிற்றுக்கிழமை
11.08.2013 நாளை காலை 10
மணிக்கு கொடியேற்றம்.
அனைவரும் வருக
அன்னையின் அருள் பெறுக.

**மஹோற்சவ குரு: சபரிமலை குருசுவாமி**
ஆதீனகர்த்தா.
உரும்பிராய் ஐயப்பன் ஆலயம்.
பிரம்மஸ்ரீ தானு வாசுதேவ சிவாச்சாரியார்
தேவஸ்தானம். பரிபாலனசபை சபை.

(3562)



**பேரன்புடையீர்!**

## நூல்வெளியீட்டு விழா அழைப்பு

**நூலின் பெயர்: தென்னிந்தியத் திருத்தலங்கள் பதினாறு**

ஆக்கம்: திரு.பொ.சிவப்பிரகாசம் அவர்கள்
(ஓய்வுபெற்ற பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர்)

**இடம்: ஸ்ரீ வதிரிபீட விநாயகர் ஆலய மண்டபம்**
**காலம்: 11.08.2013 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்: மாலை 3 மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பம்**
**மாலை 4.15 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பம்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய நிர்வாகம்,

**ஸ்ரீ வதிரி பீட விநாயகர்,**

தேவஸ்தானம் கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்

(3546)


# பப்புவா நியூகினியாவில் 39 பேர் குடியமர்த்தப்பட்டுள்ளனர்

புதிய பிராந்திய குடியேற்ற ஏற்பாட்டுக்கமைய புகலிட கோரிக்கையாளர்கள் 39 பேர் அடங்கிய நான்காவது குழுவினரும் பப்புவா நியூகினியாதீவில் குடியமர்த்தப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலய பேச்சாளர் நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பப்புவா நியூகினியாவுடன் கட ந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்டவிரோதமாக வந்தவர்கள் விசாரணைக்காக பப்புவா நியூகினியாவுக்கு அனுப்பப்படுவர். இவர்கள் அகதி என காணப்படின் அங்கேயே குடியமர்த்தப்படுவர்.

அகதியாக இனங்காணப்படாதவர்கள் அவரவர் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவர். அல்லது தற்காலிகமாக முகாம்களில் தங்க வைக்கப்படுவர் என்றார். (அ-2)

# பூம்புகார் கிராமத்திற்கு மின்சார விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு பூம்புகார் கிராமத்திற்கு மின்சார இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது.

முழு நாடும் ஒளி பெறுகின்றது என்ற மஹிந்த சிந்தனையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வடக் கின் வசந்தம் கிராமிய மின் வழங்கல் திட்டத்தின் அடிப்படையில் மீள் குடியேற்றம் இடம்பெற்ற பூம்புகார் கிராமமானது அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் நேரடி வழிகாட்டலில் மின்சார வசதியினை நேற்றையதினம் பெற்றுக் கொண்டது.

நேற்றுக்காலை அங்கு விஜயம் செய்த அமைச்சர் பூம்புகார் கிராம மக்களின் ஆரவாரத்திற்கு மத்தியில் உத்தியோகபூர்வமாக மின்சார விநி யோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து அம்மக்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் ,

இது ஓர் ஆரம்பம் என்றும் மஹிந்த சிந்தனையின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழான செயற்றிட்டத்தில் ஏனைய அடிப்படை வசதிகளும் பெற்றுத் தரப்படும் எனத் தெரிவித்தார். (அ-2)


## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து(V)
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா : 55 சூ,செவ் 8
உயரம்: 5’6”
தகைமை/தொழில்: Engineer, PHD
அவுஸ்திரேலியா
தொ.இ:B2190

பிறப்பு: 1986 RC(V)
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 5’8”
கி.பா :34
தகைமை/தொழில்: A/L, Engilish Diploma
Business Promotion Officer
தொ.இ:B2193

பிறப்பு: 1981 இந்து(KO)
நட்சத்திரம்: மகம்
கி.பா : 16.5 செவ் 7
உயரம்: 5’6”
தகைமை/தொழில்: BA, Dip in Education
ஆசிரியர்
தொ.இ:B2194

பிறப்பு: 1982 இந்து(V)
நட்சத்திரம்: உத்தரம் 4
உயரம்: 5’8”
கி.பா : 15.5
தகைமை/தொழில்: MSc
உதவி பொறியியலாளர் UK high skill migration
தொ.இ:B2200

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1986 இந்து(V)
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா : 24
உயரம்: 5’ 5"
தகைமை/தொழில்: A/L
தொ.இ:G2218

பிறப்பு: 1985 இந்து(விஸ்வகுலம்)
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா : 11.5
உயரம்: 5’
தகைமை/தொழில்: BBA
கணக்காளர்
தொ.இ:G2219

பிறப்பு: 1979 இந்து(KO)
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா : 52 செ 4
உயரம்: 5’3”
தகைமை/தொழில்: Nursing Office
தொ.இ:G2223

பிறப்பு: 1990 இந்து(குருகுலம்)
நட்சத்திரம்: புசம் 2
கி.பா : 48.75
உயரம்: 5’ 2"
தகைமை/தொழில்: O/L
தொ.இ:G2227

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிலிங்க இரதபவனி

காசி விஸ்வநாதர்- வடமராட்சி
சம்பந்தர் கடை மந்தினி வீதியால்
காலை 9.00-மதியம் 1.00
உச்சில் புவனேஸ்வரி அம்மன் கோயில்- மாலை-3.00-இரவு
கலட்டிப் பிள்ளையார் கோயில்
ஸ்ரீ சோமநாதர் -வலிகாமம்- காலை 9.00 -மாலை 3.00
சுழிபுரம் கதிர்வேலாயுத சுவாமி கோயில்
பாணவெட்டி அஞ்சல் அலுவலகம் வழியே மாலை 5.00- இரவு
சிவபூமி முதியோர் இல்லம்
இராமேஸ்வரம்-கிளிநொச்சி/
தென்மராட்சி
மதியம்12.00-4.00
சங்கத்தார் வயல் மாலை 6.00-7.00
இயக்கச்சி கிருஸ்ணர் கோயில்- இரவு

# மின்னஞ்சல்மூலம் நிதிமோசடி; நைஜீரிய பிரஜை கைதானார்

ஐக்கிய நாடுகள் சபையினால் வழங்கப்படும் 5 இலட்சம் அமெரிக்க டொலர் பரிசாகக் கிடைத்துள்ளதென ஏமாற்றி மின்னஞ்சல் மூலம் நிதி மோசடி செய்த நைஜீரிய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்ற விசாரணை திணைக்களம் தெரிவித்துள்ளது.

பணப்பரிசு என கூறி மின்னஞ்சல் அனுப்பும் நபர்களின் தனிப்பட்ட தகவல்களை அறிந்து கொண்டு அவர்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளிலும் குறுந்தகவல் அனுப்பி இவ்வாறு நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக குற்ற விசாரணை திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

பரிசுத் தொகையை இலங்கைக்கு கொண்டு வரும்போது செலுத்த வேண்டிய சுங்கவரியை வங்கிக் கணக்கொன்றில் வைப்பிலிடுமாறு கோரி நைஜீரிய பிரஜை ஒருவர் மோசடி செய்துள்ளார்.

இது குறித்து விசாரணை செய்த குற்ற விசாரணை திணைக்களத்தினர் கடந்த 5 ஆம் திகதி வத்தளை பகுதியில் வைத்து நைஜீரிய பிரஜையை கைது செய்து வத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே மின்னஞ்சலுக்கும் தொலைபேசிக்கும் இவ்வாறு தகவல் வந்தால் உடனடியாக 011-24444 80-81-82-83 இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பொலிஸாரிடம் முறையிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் குற்ற விசாரணை திணைக்களத்தினர் விசாரணை செய்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# படையினரின் செயற்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்க முயற்சி

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்திற்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலிவேரியவில் அண்மையில் இடம் பெற்ற சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச யுத்தக்குற்ற விசாரணைகளை கோரும் முனைப்புக்கள் இடம்பெற்று வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த தாக்குதல் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரியிருந்தது. இராணுவத்தினரும் பொலிஸாரும் தனித்தனியாக இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

படைவீரர்களின் தனிப்பட்ட செயற்பாடுகளினால் இராணுவத்தின் நன்மதிப்பிற்கு குந்தகம் ஏற்பட அனுமதிக்க முடியாது.

2009 ஆம் ஆண்டு யுத்த நிறைவிலிருந்து சர்வதேச யுத்தக் குற்றச் செயல் விசாரணைகளை வலியுறுத்தி வரும் தரப்பினர் வெலிவேரிய சம்பவத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# டீ.சீ.டீ.என்னும் இரசாயனம் குறித்து இலங்கையில் பரிசோதிக்கலாம்

## இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பால்மாக்களில் அடங்கியுள்ள டீ.சீ.டீ. எனும் நச்சு இரசாயனம் தொடர்பில் பரிசோதிப்பதற்குத் தேவையான அனைத்து ஆய்வுக்கூட வசதிகளும் இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் (ஐ.ரி.ஐ) உள்ளன என இந்நிறுவனம் அறிவித்துள்ளது.

டீ.சீ.டீ நச்சு இரசாயனம் தொடர்பில் பரிசோதிப்பதற்கான வசதிகள் இலங்கையில் இல்லையென்று பொன்டெரா நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்கு பதிலளிக்கும் வகையிலேயே இலங்கை கைத்தொழில் நுட்ப நிறுவனம் மேற்கண்ட அறிவிப்பை விடுத்துள்ளது.

பொன்டெரா நிறுவனத்தின் செய்திக்கு தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ள ஐ.ரி.ஐ. நிறுவனம் 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மற்றும் நவம்பர் மாதக் காலப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஃபென்டெரா நிறுவனத்தின் பால்மா உற்பத்திகள் இன்னமும் சந்தைகளில் விற்பனைக்காக உள்ளன என்றும் இவற்றிலேயே அதிகளவில் டீ.சீ.டீ.நச்சு இரசாயனம் கலந்திருப்பதாக தெரிய வந்துள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள பரிசோதனை நிலையங்களில் டீ.சீ.டீ.நச்சு இரசாயனம் தொடர்பில் பரிசோதிப்பதற்கான வசதிகள் இல்லை என்று பொன்டெரா நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றை பல்வேறு ஊடகங்களும் பிரசுரித்திருந்தன. ஐ.ரி.ஐ.நிறுவனம் மேற்படி இரசாயனம் தொடர்பில் நடத்திய பரிசோதனையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்புக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள ஐ.ரி.ஐ. நிறுவனம் டீ.சீ.டீ.பரிசோதனை மாத்திரமன்றி டீ.சீ.டீ.பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மெலமைன் பரிசோதனைக்குரிய வசதிகளும் அவற்றை பரிசோதிப்பதற்கான விசேட உபகரணங்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற ஆய்வாளர்களும் தங்களது நிறுவனத்தில் உள்ளனர் என்றும் ஐ.ரி.ஐ.நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது. (அ-2)

# தொழில்சார் கற்கை நெறி

(தும்பளை)

வடமராட்சி சுருக்கெழுத்து கழகம் தொழில்சார் கற்கைநெறிகளை கரவெட்டி வதிரியில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளது.

இதில் சுருக்கெழுத்து தட்டச்சு, தமிழ் தட்டச்சு, ஆங்கில தட்டச்சு, கணனி தமிழ் தட்டச்சு பயிற்சி, தமிழ் தட்டச்சு இசைப்பலகை பயிற்சி, கணனி பயிற்சி ஆகிய கற்கை நெறிகளே பயிற்றுவிக்கப்படவுள்ளன.

அத்தோடு இடம்பெயர்ந்தோர், சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் ஆகிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படுமென வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தலைவர் வ.சிவச்சந்திரதேவன் அறிவித்துள்ளார். (அ-9-19)

# ஆங்கில கலைவிழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை Butterfly international school இன் ஆங்கிலக் கலைவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு மாவடி ஞான வைரவர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் வே. அருந்தவராசா, சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி து.கிருபாகரன், யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பப் பிரிவு மேற்பார்வையாளர் எவ்.டி. அதிசயதாசன், மாவடி அறநெறிப்பாடசாலை அதிபர் கே.நல்லையா, முன்பள்ளிப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அலுவலர் சி.கயல்விழி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவிற்கான ஆசியுரைகளை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள், அருட்தந்தை அன்ரொய் மரியன் அடிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-5)

# பொன்டெரா நிறுவனம் தமது உற்பத்திகளை மீளப் பெறுகிறது

டீசீடீ பதார்த்தம் இருப்பதாக குற்றம் சுமத்தப்படும் தமது உற்பத்திகளை ஓரிரு நாட்களுக்குள் சந்தையில் இருந்து மீளப்பெறவுள்ளதாக பொன்டேரா நிறுவனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பொன்டேரா நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையின்படி,

டீசீடீ பதார்த்தம் அடங்கியுள்ள இறக்குமதி பால்மா உற்பத்திகளை இலங்கையில் சுகாதார அமைச்சு தடை செய்துள்ளமையை அடுத்தே இந்த அறிவிப்பை பொன்டேரா விடுத்துள்ளது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின்படி இறக்குமதி செய்யப்படும் அனைத்து பால்மாக்களும் டீசீடீ அற்றவையென உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய அங்கர் 1+ (தொகுதி இலக்கம்- 107610163), அங்கர் புல் கிறீம் மில்க் பவுடர் (தொகுதி இலக்கம் - 0605C0883), மலிபன் நொன் பட் மில்க் (தொகுதி இலக் கம் 13074ய A1), டயமன்ட் மில்க் பவுடர் (தொகுதி இலக்கம் NWIFIPDXI) என்பன சந்தையில் இருந்து மீளப் பெறப்படவுள்ளன. (அ-2)

# மத்தளவுக்கு விமானங்களை வரவழைக்க விசேட சலுகை

(கொழும்பு)

மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு விமான சேவையை விஸ்தரித்து பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அச்செய்தியில் அம்பாந்தோட்டை மத்தள பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்குச் செல்லும் விமானங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இதனை கருத்திற்கொண்டு விமானங்கள் மற்றும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் அரசாங்கம் மத்தள விமான நிலையத்தின் ஊடாக இலங்கை பயணிக்கும் விமானக் கட்டணங்களை குறைத்துள்ளது.

இதேவேளை, எமிரேட்ஸ், கல்ப் எயார் போன்ற வெளிநாட்டு விமான சேவை நிறுவனங்களின் விமானங்களை மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கவும் அங்கு நிறுத்தி வைப்பதற்கான கட்டணங்களை 50 வீதத்தினாலும் அரசாங்கம் குறைத்துள்ளது.

இதனைத் தவிர விமானங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரண காலமும் நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாத தொடக்கத்தில் வெளிநாட்டு விமானங்களிடம் அறவிடப்பட்ட கட்டணங்களில் 50 வீதம் சலுகையளிக்கப்பட்டது. இதற்கிணங்க இந்தக் கட்டண சலுகையை தொடர்ந்தும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு வரும் விமானங்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அந்த விமான நிலையத்தை, விமானங்களை பழுது பார்க்கும் நிலையமாக மாற்ற அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஆலய புனரமைப்பு செலவினங்களை விரைவில் சமர்ப்பிக்க வேண்டும்

## இ.ச.க.அலுவல்கள் திணைக்களம் தெரிவிப்பு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்து ஆலய புனரமைப்புக்கென வழங்கப்படும் நிதியுதவி பெற்ற ஆலயங்களில் செலவின விபரங்களை இது வரையில் திணைக்களத்தில் சமர்ப்பிக்காத ஆலயங்கள் அவற்றை உடன் சமர்ப்பிக்க வேண்டுமென திணைக்கள பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

திணைக்களத்தின் மூலம் கடந்த 2010, 2011, 2012 மற்றும் இவ்வாண்டுகளில் நிதியுதவி பெற்ற ஆலயங்களே தாம் மேற்கொண்ட புனரமைப்புசீர்திருத்தங்கள் தொடர்பான முழுமையான விபரங்களை சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆவணங்களை திணைக்களத்தில் சமர்ப்பிக்காத பட்சத்தில் மேலதிக அரச உதவிகளை பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்ள நேரும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மண்ணினுள் உள்ள நன்மைதரும் நுண்ணங்கிகள் பற்றிய தேடலும் விருத்தியும் நமது சூழலைப் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிக்கும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

விரைந்த வளர்ச்சியும் அதிகரித்த விளைச்சலும் என்ற குறிக்கோள்களுக்குள் கட்டுண்டிருந்த விவசாயத்தினால் விதம் விதமான உள்ளீடுகளுக்கு இசைந்து கொடுக்கக்கூடிய பயிரினங்களை உருவாக்க முடிந்ததேயன்றி சூழலைப்பற்றி எள்ளளவும் அக்கறை கொண்டிருக்கவில்லை. ஆக உள்ளீடுகளும் விளைச்சலும் என்பது பற்றிய பேச்சு மட்டுமே எங்கும் ஒலித்ததேயன்றி மண்ணைப் பற்றியோ, நாம் வாழும் சூழலைப்பற்றியோ எந்தவிதமான கரிசனையும் இன்னமும் காட்டப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது. பயிருக்குத் இங்கே கருத்தில் கொள்ளப்பட வேண்டும். களி மண் தரையில் சேதனப் பசளைகளை அதிகளவில் இடக்கூடாது. அதுவும் உக்காத சேதனப் பொருட்களை இடக்கூடாது. களிமண்ணிற்கு நீரைப்பிடித்து வைத்திருக்கும் தன்மை அதிகமாக இருப்பதனால் அதிகளவில் உக்காத சேதனப் பொருளை இடும்போது காற்றின்றிய சுவாசம் நிகழக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகும். இது இறுதியில் விளைவிக்கும் பயிரின் வேர்த்தொகுதிக்கு எதுவிதமான நன்மையும் செய்யாது மாறாக தீங்கினை விளைவிப்பதாகவே அமையும்.

நன்றாக உக்காத சேதனப்பசளைகளை உக்கத் தொடங்கிவிடும். அப்போது நாற்றுப் போட்ட பயிர்களை நடவு செய்வர்.

அவரைக் குடும்ப பயிராக இருந்தால் அது வளியிலுள்ள தழைச்சத்தை இழுத்து வேரிலுள்ள முடிச்சுகளை உருவாக்கும் ரைசோபியம் பக்றீரியாவுடன் சேர்ந்து மண்ணினுள் நிலைநாட்டும். இவ்வகையான தாவர மூலமான தழைசத்தின் உற்பத்தி மண் வளத்தை மேம்படுத்த பெரிதும் உதவும். இது ஒரு இயற்கை பொறிமுறை. விவசாயிக்கும், சூழலுக்கும் ஏன் எமக்கும் நன்மை தருகின்ற பயிர்ச்செய்கை முறை. இதனை வீட்டுத்தோட்டத்திலும் நாம் முழுமையாகக் கடைப்பிடிக்கலாம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 30-I

தேவையான வளமான மேற்படை மண்ணை, ஈரப்புடன் வைத்திருக்க வேண்டிய எந்தவிதமான முன்னெடுப்பும் எடுக்கப்படவில்லை. முதலாவது பசுமைப்புரட்சி சூழலையும் மண்ணையும் முழுதாகவே மறந்து விட்டது. அதுவே முதல் தவறாகிவிட்டது. தவறுகளிலிருந்தாவது நாம் பாடம் கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

மண்ணின் வளத்தை மேம்படுத்தும் செயல்களில் எதிர்வரும் காலத்தில் பசுமைப் புரட்சியை நெறிப்படுத்த வேண்டிய கட்டாயத்தினுள் நாம் அனைவரும் உள்வாங்கப்பட்டிருக்கின்றோம். இதனை முன்கூட்டியே அனுமானித்திருந்தால் பயிர்ச்செய்கையில் ஏற்படும் இவ்வளவு அவலமும் ஏற்பட்டிருக்காது. விளை நிலத்தில் உள்ள மண்ணின் உயிர்ப்புத் தன்மையை ஏற்படுத்த அதிலுள்ள நன்மை தரும் நுண்ணங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். இவ்வாறான நுண்ணங்கிகளின் ஆதிக்கத்தை அதிகரிக்க அவை வாழுகின்ற மண்ணில் அவற்றிற்கான சேதன சேர்வைகளின் கிடைத்தற்தன்மையை அதிகரிக்க வேண்டும்.

விளைநிலத்திற்கு தேவையான மட்கு அதிகமாக இருந்தால் பயிரின் வளர்ச்சியும் மேம்படும். மண்ணிற்குத் தேவையான அளவு சேதனப்பொருட்களை பசளையாகவோ அல்லது ஆதாரப் பொருட்களாக இடும்போது நன்மைதருகின்ற நுண்ணங்கிகள் இவற்றில் பல்கிப் பெருக ஏதுவாக அமையும். அத்துடன், மண்ணினுள் வளமான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும். மண்ணிலுள்ள வாயுப் பரிமாற்றத்திற்கும் நன்மை தரும். நுண்ணங்கிகளின் இயல்பான பெருக்கத்திற்கும் சேதனப் பசளைகள் பெரிதும் உதவுகின்றன.

### மண்ணின் தன்மையும் சேதனப் பொருட்களுமெ

எமது பிரதேசத்திலுள்ள மண்ணின் தன்மைக்கேற்ப சேதனப் பொருட்களை இடுவதன் அளவை நாம் நிர்ணயிக்கலாம். களி மண் தரையாக இருப்பின் சேர்க்கப்படும் சேதனப் பசளைகள் மண்ணை இறுக்காது வேர் இலகுவாக வளர்ந்து வியாபிக்கவும் அகன்று வளரவும் உதவும். அதுபோல மணற்பாங்கான மண்ணாயின் அதிலுள்ள ஊட்டச்சத்து மிக மிகக் குறைவாக இருப்பதனால் சேதனப் பொருட்களின் சேர்க்கை மண்ணை வளமாக வியாபித்திருக்க வைத்திருக்க பெரிதும் பயன்படும். மண்ணின் வெப்பநிலை, ஈரப்பதன் மற்றும் கார, அமிலத் தன்மை என்பன வாரியிறைத்துவிட்டால் போதும் என எண்ணக்கூடாது. காற்றின்றிய சுவாசத்தை ஊக்குவித்தால் காற்றுச் சுவாசம் மூலம் இனம் பெருக்கும் நன்மை தரும் நுண்ணங்கிகள் மண்ணினுள் அழிவுற்று விடும். கிட்டத்தட்ட நீர் அதிகமாகி "சேறு" போன்றதொரு நிலைமை ஏற்படும் போது. வேர்களுக்குத் தேவையான சுவாசம் கிடைக்காமையினால் வேர் மயிர்கள் அழுகத் தொடங்கி பின் வேரையே அழுக வைத்து விடும். வழக்கமாக நாம் குளிப்பதற்கு பயன்படுத்தும் நீரை வாய்க்கால் மூலம் தொடர்ந்து பாயவிடும் இடங்களில் நீர் தேங்கியிருக்கும் நிலை வரும்போது மண்ணினால் அகத்துறிஞ்ச முடியாத நிலையில் காற்றின்றிய சுவாசத்திற்குள் அப்பகுதி உள்வாங்கப்படும். இது இறுதியில் அதிலுள்ள பயிர்களின் இறப்புக்கு காரணமாகிவிடும். குளிக்கும் கிணற்றுப்பகுதியில் நீர் தொடர்ச்சியாக செல்லும் போது இவ்வாறான நிகழ்வுக்கான ஊக்குவிப்பாக அது அமைந்து விடும்.

### சேதனப் பசளைகளாக பசுந்தாள் பசளைகள்

அசேதனப் பசளைகளுக்கான மாற்றீடாக பசுந்தாள் பசளைகளும் பசுந்தாள் இலைப் பசளைகளும் பயன்படுகின்றன. எங்கள்விவசாயிகளுக்கு இவற்றின் முக்கியத்துவம் தெரியாத நிலையில் வெறுமனே அசேதனப் பசளைகளை மட்டுமே நம்பியிருந்த நிலையிலிருந்து மீள வேண்டிய காலம் கனிந்திருக்கிறது. பசுந்தாள் பசளைகளின் சேர்க்கை மண்ணுக்கு அதன் தன்மையை மேம்படுத்த உதவும். சூழல் மாசடைவதையும் குறைக்கும்.

### பசுந்தாள் பசளைகள்

எந்த மண்ணில் விவசாயம் செய்கின்றோமோ அந்த மண்ணில் சாதாரணமாக பயிர் செய்வதற்கு முன்கூட்டியே பசுந்தாள் பசளை தாவரங்களை பயிர் செய்யும் முறை பல இடங்களில் கடைப்பிடிக்கப்படுகின்றது. கிட்டத்தட்ட ஒரு மாதங்களுக்கு முன்னரேயே உழுதுவிட்ட வயற்பரப்பில் முதல் மழையுடன் இதன் விதைகளை விதைப்பர். அதனுடன் சேர்த்து அம் மண்ணில நட வேண்டிய பயிரில் மிளகாய், தக்காளி, கத்தரி, புகையிலை போன்ற எப்பயி ராயினும் அதன் நாற்று மேடையும் அமைக் கப்படும்.

நாற்று நடுவதற்கான பருவம் வரும்போது இங்கே வயற்பரப்பில் பசுந்தாள் பசளையாக விதைத்த தாவரம் பூக்கத் தொடங்கிவிடும். 50சதவீதம் பூத்திருக்கும் நிலையில் அந்த தாவரத்தை மடக்கிபிரட்டி மண்ணினுள் சேர்த்து உழுது விடுவர். ஓரிரு கிழமைகளுள் சணல்

இன்னொரு பசுமைப்புரட்சியில் அசேதன இரசாயனங்களின் பாவனையை இயன்றளவில் குறைத்து சேதன முறையிலான இயற்கையை அனுசரித்து செய்யும் பயிர்ச்செய்கை முறையை விரிவுபடுத்த வேண்டும். இருக்கின்ற ஒரு வழியும் இது தானே.

அவரைக் குடும்பத்திலுள்ள பயிர்களுக்கு வளியிலுள்ள நைதரசனை - தழைச் சத்தை வேர முடிச்சுக்களாக மண்ணில் பதிக்கும் திறன் உண்டு. சணல் தவிர, உழுந்து, பயறு போன்ற பயிர்களைக்கூட இத் தேவைக்குப் பயன்படுத்தலாம்.

அத்துடன் எமது வயற்பரப்பில் களையாக காணப்படும் 'காவிளாய்' ஒரு அவரைக் குடுமப் பயிர். இது வளர்ந்து பூக்க ஆரம்பிக்கும் போது மடக்கி உழுதுவிட்டால் களையாக உள்ளதை பசுந்தாள் பசளையாக்கும் வழி கிடைத்து விடும். எதற்கும் நேர அளவுதானே முக்கியம். திட்டமிட்டபடி விவசாயத்தை செய்ய விழையும் போது இப்பயிர்ச் செய்கை முறைகள்



நிறைந்த பலனைத் தரும். காவிளாய் பூததிருக்கும் போது அது பசுந்தாள் பசளை, காய் த்து விதை கொட்டினால் அது தலையிடி தரும் களை.

பசுந்தாள் இலைப் பசளைகள் என்பவை தரிசுக்காணிகளில், உயர் வேலிகளில், பாதையோரத்தில் வளர்ந்திருக்கும் மரங்கள் ஆகியவற்றின் இலைகளை கொய்து அல்லது கத்தரித்து வயலுக்கு இடுதலாகும். மாறாக பசுந்தாள் பசளைகள் பயிர் செய்யும் நிலத்தில் விளைவித்து அதனுள்ளே இடுதலாகும். இது மண்ணில் உதித்தவை. அரைவயதில் சருகாக மண்ணினுள்ளேயே புதைக்கப்படுவதை ஞாபகமூட்டுகிறதல்லவா. பசுந்தாள் இலைப் பசளைகளைப் பயன்படுத்துவதில் எங்கள் விவசாயிகள கில்லாடிகள். ஆனாலும் ஒரு சிலரே இதனைக் கடைப்பிடிப்பதனை அவதானிக்க முடிகிறது.

பசுந்தாள் இலைப் பசளைகளாக உயர் வேலிகளில் வளர்க்கப்படும் பூவரசு, கிளிறிசிடியா அல்லது சீமைக்கிளுவை போன்றவையும், தரிசுக் காணிகளில் வயற்பரப்பில் தானாகவே வளர்ந்திருக்கும் எருக்கலை மற்றும் பன்னை போன்றவற்றின் இலைகளை வெட்டிவிட்டு வாடிய பின் மண்ணைப் பயன்படுத்தும் போது அதனுள் தாழ்த்து விட்டால் இலைகள் மண்ணினுள் உக்கி வளரும். பயிருக்கு சிறந்த உரமாகி விடும்.

### பசுந்தாள், பசுந்தாள் இலை பயன்பாட்டில் வேறு பலன்கள்.

இவ்வகைத் தாவரங்களில் இயல்பாகவே பூஞ்சண எதிர்ப்பு, பக்றீரியா எதிர்ப்புசக்தி இருப்பதனால் நாற்றுக்களின் வேரினூடாக ஏற்படும் அநேகமான நோய்கள் கட்டுப்படுத்தப் படுகின்றன. இவற்றை மண்ணினுள் சேர்ப்பதனால் விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய பயிருக்கு வலிமை சேர்க்கும் நுண்ணங்கிகளின் எண்ணிக்கையை குறைவடையவிடாது பாதுகாக்க முடியும். அதே நேரத்தில் அவற்றின் எண்ணிக்கையை விரைந்து பெருக்கி விடவும் வழி பிறக்கும். இதனால் பயிர்களில் நோயை உருவாக்கும் நுண்ணங்கிகளின் எண்ணிக்கையை, வலிமையை, நலிவடையச் செய்து விடலாம். பசுந்தாள் இலைகளை மண்ணினுள் இடும்போது மண் உயிர்ப்புத் தன்மை பெறுகின்றது. அதேநேரத்தில் இரசாயனங்களின் செறிவினை மண்ணில் மாற்றியமைக்கும் செயலையும் இலகுவில் செய்துவிடும். இன்னொரு வகையில் பயிருக்கு கிடைக்கக் கூடிய சத்துக்களாக மாற்றியமைப்பதனால் அவை பயிரினால் இலகுவாக அகத்துறிஞ்சப்பட பயிர் செழித்து வளர்ந்துவிடும். மண்ணின் தன்மை மற்றும் வளம் குறைந்துவிடாது. பயிர்ச்செய்கை செய்வது சிறந்ததாகும். மண்ணினுள் பயிர்களுக்கு நோயை உருவாக்கும் நுண்ணங்கிகளை பல்கிப் பெருக இடமளித்துவிட்டால் பின்னர் பயிர்ச்செய்கையில் அதுவே பெருந்தலையிடியாகிவிடும்.

மண் வளத்தை பெருக்கும் அதே நேரத்தில் அதிலிருந்து அதன் வளம் கெடாது உச்சப்பயன்பாட்டைப்பெற நாம் என்றும் முயற்சிக்க வேண்டும். இதற்கு மண்ணினுள் உள்ள நன்மை தரும் நுண்ணங்கிகள் பற்றிய தேடலும் அவைபற்றிய ஆய்வும் எமக்கு இவை பற்றிய பயன்பாட்டை அதிகரிக்க செய்ய வழிசெய்யும். விவசாய செய்கையில் விவசாய பெருமக்களுக்கு தலையிடியாக இருக்கும் பீடைகளையும் நோய்களையும் கட்டுப்படுத்த நன்மைதரும் நுண்ண்ணங்கிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆவனசெய்து மண்ணை வளமானதாக உயிர்ப்புள்ளதாக பேணுவோம்.

# நல்லூர் உற்சவ காலத்தில் கைத்தொழில் கண்காட்சி

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதுடன் நுகர்வோருக்கு தரமான பொருட்களை பெற்றுக் கொள்ளச் செய்யும் கைத்தொழில் கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்வின் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ் அங்குரார்ப்பண நிகழ்வு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 6 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள இக்கைத்தொழில் கண்காட்சி மற்றும் விற்பனை சந்தை, பனை அபிவிருத்திச்சபை, தேசிய அருங்கலைகள் பேரவை, இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய வடிவமைப்பு நிலையம் மற்றும் [illegible] பத்தி கருத்திட்டம் ஆகியவற்றின் பங்களிப்புடன் நடைபெறவுள்ளது. (அ-5)

# ஏழு பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்வு

வடமாகாண பாடசாலைகளில் 7 பாடசாலைகள் புதிதாக தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன.

இத்தகவலை கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் வடமாகாண செயலாளர் சி.சத்தியசீலன் வெளியிட்டுள்ளார்.

இதன்படி கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளான கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளி/[illegible] மகா வித்தியாலயம் ஆகியவை[illegible] முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளான மு/வித்தியானந்தா கல்லூரி, மு/மல்லாவி மத்திய கல்லூரி, மு/சம்பத்நுவர மகா வித்தியாலயம் ஆகியனவும் மன்னார் மாவட்ட பாடசாலைகளான மன்/முசலி மகா வித்தியாலயம், மன்/அல்-அஸ்ஹர் மகா வித்தியாலயம் ஆகியனவே இவ்வாறு தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன.

மேற்படி 7 பாடசாலைகளும் கடந்த மாதம் 29 ஆம் திகதியிலிருந்து தேசிய பாடசாலைகளாக செயற்படும் வகையில் மத்திய கல்வி அமைச்சினால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ--5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு கொல்லியம்பாவை



## ஆன்மீகம் 82

**ஏன்** என்றால் அவர்கள் அப்படித்தானே நடந்துகொண்டார்கள். ஊருக்குகிளம்புகிறோம் என்றதும் , வழியெங்கும் தம்,தம் வீட்டிற்காக மலையில் விளைந்த கனிவர்க்கங்களை காசு கொடுத்து வாங்கி - வண்டியில் குவித்தவர்களாயிற்றே! இது என் மனைவிக்கு உசிரு, இதை கொடுத்தா எங்கப்பா சந்தோசப் படுவாரு, எம்பையனுக்கு இது ரொம்பப்பிடிக்கும், என்று உறவென்னும் மாயை தானே ஆட் கொண்டது. இவர்களை அழைத்து வந்ததே ஒரு கேலிக்கூத்து என்பது போல் ஆசான் நினைப்பது நியாயம் தானே!

அன்று இரவு வெட்டவெளியிலே, கடுங்குளிரிலே! அடர்ந்த காட்டின் நடுவிலே - நட்டநடு ரோட்டிலே! எங்கள் இரவு கழிந்தது.

பொழுது விடிந்தது. கீழ்நோக்கி செல்லும் பஸ்ஸில் ஏறி மலையிலிருந்து ஒருவழியாக ஆஸ்ரமத்திற்கு வந்து சேர்ந்தோம். தனிமை கிடைத்த போது மலைவழியில் சித்தர் என்ன நினைத்திருப்பார் என்று நான் நினைத்தேனோ - அதை நான் நினைத்தவாறே சாமிகள் அதை சொல்லி வருந்தினர். அவர்களுக்கு இன்னும் பக்குவம் அடையும் நேரம் வரவில்லை- என்றவர் - வரும்! வரும்! என்று தம் பேச்சை நிறுத்தினர்.

எங்களை மலைப்பாதையில் இரவில் அம்போ என கைவிட்ட அந்த ஊர்தி மூன்று நாட்கள் கழித்து தான் பெரம்பலூர் வந்து சேர்ந்தது. வீட்டுக்காக வாங்கிவந்திருந்த பழங்கள்- டிரைவர் தின்றது போக மீதிருந்ததை சாப்பிடும் தகுதியை இழந்து- கன்டிப்போய் நொந்து நூலாகி இருந்தது. இதை பார்த்ததும் நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது- என்ற சொற்றொடர் தான் என்நினைவுக்கு வந்தது.

**நம்பி மலை**

இம்முறை எங்களுடன் ஒரு கிறிஸ் துவமதப் பெரியவர் வந்திருந்தார். இவர் இந்த மலை முழுவதும் நன்கு அறிந்தவர். இவர் தம் வாலிப வயதுகளில் இம்மலைகளில் மரங்கள் ஏலம் எடுத்து வெட்டி வியாபாரம் செய்து கொண்டிருந்தாராம். இம்



கொல்லிமலை ஆகோச அருவியின் ஓரம் அன்னதானம்.

மலையில் எல்லா இடங்களையும் தெரிந்திருந்தாராம். இம்மலை எங்கும் வியாபித்து விளங்கும். இவர்களுக்கு குகைகளின் விபரம் எதுவும் தெரியாது. அவரைப்பொறுத்தவரை அவைகள் சாதாரண மலைக்குகை தான் சித்தர் பெருமான் ஒவ்வொரு குகைகளைப்பற்றியும் அதிலிருந்த சித்தர்கள், தவசிகள் , முனிவர்கள் பற்றியும் விளக்கமாக எங்களிடம் கூறும்போது அவைகளைக்கூர்ந்து கவனித்துவந்த 'அந்த கிறிஸ்தவப் பெரியவர் அவர் பெயர் சிம்சன் என்பதாகும். வியப்புடன் சாமியைப் பார்த்து ஐயா! தாங்கள் கூறுவதைப் போல இந்த மலையில் நான் எந்த சாமியையும் பார்த்ததில்லிங்களே. என் வாழ்வில் இம்மலைக்கு வந்த சாமியார் நீங்கள் மட்டும்தான் வேறுயாரும் வருவதில்லை. ஆனால், நீங்களே என்று மேலே பேசமுடியாமல் தயங்கினார். இதைக் கண்ட சித்தர் பெருமான் சிரித்தவாறே இப்போ காவிக் கட்டிக்கிட்டு அலைகின்றவர்களெல்லாம் இந்த மலையில் கால்வைக்கமுடியாது. அவர்களுக்கு இதன்மகிமையும் தெரியாது. நான் குறிப்பிட்டவர்கள் முற்காலங்களில் வாழ்ந்த பெரியவர்கள். அவர்கள் இப்போதும் இங்குதான் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மற்றவர்கள் கண்களுக்கு தென்படமாட்டார்கள். காரணம் இப்போ நடப்பது அதர்மக்காரர்கள் காலம், மகான்கள் வெளியுலகத்தினர் கண்களுக்கு அவர்கள் சமாதியானது தான் தெரியும். அவர்கள் ஜீவசமாதி நிலையில் இருக்கிறார்கள். உங்கள் ஏசுநாதர் மறிக்கவில்லை. அவர் நம்மிடையே தான் வாழ்கிறார் என்று சாமிகூறியவுடன் பக்தி மேலீட்டால் அப்பெரியவர் - தம் கழுத்தில்மாட்டி இருந்த சிலுவையை கண்களில் ஒற்றிக்கொண்டார்.

அது முதல் அப்பெரியவர்சாமிகளிடம் பயபக்தியுடன் நடந்து கொண்டார்.இந்த பயணத்தில் இந்த மலையில் வழிகாட்டுவதற்காக எங்களிடம் வந்திருந்த ஒரு அன்பரை பற்றி நான் உங்களிடம் அறிமுகப்படுத்தியே ஆகவேண்டும்.

தொடரும்

**அன்னை சித்தர்**
**இராஜ்குமார் குருஜி**

# தெலுங்கானா போரில் தீரமிகு பெண்கள்!

**ஏழு பெண்களின் வாழ்க்கைக் கதையை கொண்டு அற்பகண்ணோட்டங்களைத் தகர்ந்து எறிகின்றது என்ற இந்நூலின் தெலுங்கானா போரில் தீரமிகு பெண்களின் அறிமுக நூல் இங்கே:-**



**வீட்டுக்கு** பொலிஸ் வந்தாலே, குடும்பகௌரவம் போச்சு! நமக்கு இந்த புரட்சி அரசியல்எல்லாம் வீண் வம்பு என்ற மதிப்பீட்டின் படிவாழச் சொல்லும் ராகவம்மா பாட்டியிடம் சீதாராமையா பேசும் வார்த்தைகள் பாட்டியை ஒத்த கருத்துடைய அனைவருக்கும் பதிலாக அமைகிறது. மக்கள், விவசாய சங்கத்தையும் கம்யூனிஸ்ட்கட்சியையும் அமைத்து கொடுமைகளை எதிர்த்துக்கிட்டு இருக்காங்க! நாமும் அவங்களுக்கு துணையா நிற்போம். அவங்களோடயே இன்பதுன்பங்களை அனுபவிப்போம். இதுதான் நம்ம குடும்பத்துக்கும் வம்சத்துக்கும் மதிப்புத் தரும்! ஊரோட ஒட்டித்தான் நாம் போகணும் என்று கூறினாள் சீதாராமய்யா.

போராட்டக்குழுக்களுக்கு உதவி செய்வதிலும் கம்யூனிச லட்சியங்களை குடும்பப்பண்பாகக் கருதி செயற்படுவதிலும் தன்னிகரற்று விளங்கிய பெண்களில் நடிகட்டா கிராமத்தின் சலவைத் தொழிலாளியான லச்சம்மாவும் ஒருவர். லச்சம்மா போராட்டக்குழு தோழர்களுடன் தொடர்பு வைத்திருப்பதை அறிந்த பொலிஸ் பட்டாளம் அவளை ஊருக்கு மத்தியில் நிர்வாணப் படுத்தி, தலைகீழே மரத்தில் தொங்கவிட்டு அடிக்கிறது. போராட்டக் குழு தோழர்கள் எங்கிருக்கிறார்கள்... காட்டிக்கொடு என்று எவ்வளவோ கேவலமாக வைத்தும், அடித்தும் லச்சம்மவோ மானத்திலும் பெரிதாக மக்களுக்காகப் போராடும் கட்சித் தோழர்களைப் பற்றி ஒரு வார்த்தையும் கூற மறுக்கிறாள். படிக்காத அந்த சலவைத்தொழிலாளி பட்ட சித்திரவதைகளை அறிந்து பார்க்க வரும் போராட்டக் குழுவைச் சேர்ந்த ராமுலம்மாவின் ஆறுதலுக்கு லச்சம்மாவின் பதிலைப் பாருங்கள். அதேனம்மா! அப்படிச்சொல்றே! எனக்கு அவமானம் நேர்ந்ததா,உங்களை ஏசுவானேன்? இந்த பாழாய்ப்போன அரசாங்கத்தாலே எல்லோருக்கும்தான் கஷ்டங்களும், அவமானங்களும்?

தனக்கு மிஞ்சிய தானமும் தர்மமும்... புரட்சியும் போராட்டமும் என்று புத்திசாலித்தனமாகப் பேசும் படித்த வர்க்கத்தின் சுயநலத்தை இந்த இடத்தில் வெளுத்து வாங்கும் சலவைக்காரியாக உயர்ந்து நிற்கிறாள் லச்சம்மா. இதேபோல நரசம் பேட்டையை சேர்ந்த மல்லிகாம்பா, வாரங்கல் மத்திய சிறையில் அடக்கு முறைக்கு எதிராக உயர்ந்த ராம்பாயம்மா, சூர்யாபேட்டையைச் சேர்ந்த சிவம்மா, ஜனகாம்வட்டாரத்தைச் சேர்ந்த அகிலம்மா,... இப்படி ஒவ்வொரு பெண்களும் வெவ்வேறு வகையில் தெலுங்கானா மக்கள் போராட்டத்தோடு தங்கள் வாழ்க்கையை இணைத்துக்கொண்டதை நமக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது என்ற வகையில் இந்நூலாசிரியரான உழைப்பு வரவேற்கத்தகுந்ததாக உள்ளது. அதேவேளையில் தெலுங்கானாப்போராட்டத்தில் பங்கேற்ற தீரமிகு பெண்களின் போராட்டமரபை, நாம் பாராட்டலாம். தேர்தல் பாதைக்கு இழுத்துப்போய் தெலுங்கானாவின் இறுதி இலட்சியத்தை மூழ்கடித்துவிட்டோம் என்ற கனவில் மிதக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளின் கண்களை உறுதிப்படுத்தும்படி மேற்கு வங்கத்தின் நந்திக்கிராமிலும், லால்கரிலும் தெலுங்கானாப் போரின் தீரமிகு பெண்கள் மீண்டும் எழுந்து நிற்கிறார்கள். இப்படி எல்லா இன்னல்களையும் எதிர்த்துப் போராடும் மனவலிமை ஒரு பெண்ணுக்கு



சீரழிந்துபோன போலிக் கம்யூனிஸ்டுகள்தங்களுடையது எனப்பீற்றிக் கொள்வதற்கு எந்த நியாயமும் இல்லை. ஏன் இப்படி எங்கள் கம்யூனிசலட்சியத்தை சீரழித்தீர்கள்? என்று தெலுங்கானாப் போரின் பெண்களின் வாரிசுகளாய் நாம் கேள்விகேட்பதற்கான நியாயத்தை இந்நூல் வழங்குகிறது.

அறிந்தோ, அறியாமலோ இதற்கு உதவிசெய்வதற்காக இந்நூலாசிரியரை எங்கிருந்து வந்தது என்று நீங்கள் கேட்டால், பண்டிராமக்காவும், லச்சம்மாவும், ராம்பாயம்மாவும் எங்களது வலிமை சமூக உணர்வில், கம்யூனிச சித்தாந்தத்தில் இருக்கிறது என்கிறார்கள் அழுத்தமாக. இது சாத்தியமா? என்பவர்கள் அவர்களுடனேயே விவாதிக்க இந்தப் புத்தகத்திற்குள் செல்லுங்கள்.

முற்றும்

**இணையம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

541


## கொக்கும் கெழுத்தி மீனும்



பொன்னேரிக் கிராமத்தின் வயல்களின் நடுவே அகன்று விரிந்திருந்தது அந்தப் பொன் னேரிவாவி. பொன்னேரி என் றுமே வழங்கொளிக்கும் கிராமம். எங்கும் பச்சைப்பசேல் என அந்தக்கிராமத்தைப் பார்க்கவே கண்கொள்ளாக் காட்சியாகும். அந்தக்கிராமத்தின் விவசாயத் திற்கு தேவையான நீரை வழங் குவது இந்தப் பொன்னேரி வாவியே. அந்த வாவியில் தவளைகள், மீன்கள், ஆமைகள் என்று பல நீர் வாழ் உயிரினங்க ளும் வாழ்ந்து வந்தன. இதனால் எப்பொழுதும் அந்த வாவிக் கொக்குகளாலும், நாரைகளாலும் நிறைந்து காணப்படும்.




பொன்னேரிக்கிராமத்திற்கும், வாவிக்கும் யார் கண்பட்டதோ தெரியவில்லை. கடந்த நான்கு வருடங்களாக பெய்ய வேண்டிய மழை பொய்த்துவிட்டது. படிபடிப் படியாக பொன்னேரிக்கிராமமும், வாவியும், வறட்சி எனும் கோரப் பிடியில் சிக்கித்தவித்தன. பொன் னேரிக் கிராமத்தின் பயிர்ப்பச்சைக ளும் வாவியும் பொய்த்த மழையி னால் படிப்படியாக சோபையிழந் தன. ஆனாலும், தங்களுக்கு வாவியில் ஏதாவது இரை கிடைக் காதா என்ற ஆவலில் கொக்குக ளும், நாரைகளும் தினமும் வந்து போய்க்கொண்டிருந்தன.



ஒருநாள் மாலைவேளை வாவி யின் கரையில் கொக்குகளும், நாரை களும் தங்களுக்கு இரைகிடைக் காதா என்ற ஏக்கத்துடனும் கவ லையுடனும் உட்கார்ந்திருந்தன. இதே நேரம் வாவியின் அடியில் சேற் றில் ஒழித்திருந்த கெழுத்தி மீன் ஒன்று மெதுவாகக் காற்று வாங் கும் நோக்குடன் நீர் மட்டத்திற்குப் புறப்பட்டது. வாவியின் கரையில் கருமமே கண்ணாயிருந்த ஒருகொக் கின் கண்ணில் அந்தக் கெழுத்தி மீன் பட்டது. எல்லோரையும் முந்திக் கொண்டு அந்தக் கொக்கு வாவி யில் மூழ்கி கெழுத்தி மீனுடன் வானத்தில் "ஜிவ்" என்று பறந்தது.

பசியுடன் இருந்த மற்றைய கொக்குகளுக்கும், நாரைகளுக்கும் அந்தக் கொக்கின் செய்கை மிகவும் கோபத்தை ஏற்படுத்தியது. கெழுத்தி மீன் பிடித்த கொக்கையும், இரை யைக் கைப்பற்றும் நோக்கிலும் எல் லாக் கொக்குகளும் நாரைகளும் கலைத்துக்கொண்டு பறந்தன.ஏதோ ஓர் உள்ளுணர்வு தாக்க கொக்கு தனது தலையைத் பின் பக்கமாகத் திருப்பிப் பார்த்தது. ஓர் படையே தன்னைப் பின்தொடர்ந்து வருவதை அது கண்டது. ஆனாலும், அந்தக் கொக்கு எல்லாக்கொக்குகளும், நாரைகளுக்கும் போக்குக் காட்டிய வாறே மேலும் விரைவாகப் பறந்தது. ஆனாலும், கொக்கின் பின் னால் வந்த பெரும்படையின் சுற்றிவளைப்பில் இருந்து தப்ப அந்தக்கொக்கு மிகவும் கஸ்ரப்பட வேண்டியதாக இருந்தது.



அப்பொழுது அந்தக் கொக்கி ற்கு ஓர் யோசனை தோன்றியது. "நான் இந்தக் கெழுத்திமீனை வைத் திருப்பதால் தானே இந்தக் கொக் குகளும் நாரைகளும் என்னை விட் டுக் கலைக்கின்றன. இதை விட்டு விட்டால் என்ன??" என எண்ணிய வாறே அது தனது அலகில் இருந்த கெழுத்தி மீனின் பிடியைத் தளர்த் தியது. கெழுத்தி மீனோ கொக்கின் பிடியில் இருந்து கீழேநோக்கி விழத் தொடங்கியது.அப்போது இந்தக் கொக்கைப் பின் தொடர்ந்த கொக் குகளும் , நாரைகளும் திடீரெனக் கீழே விழும் கெழுத்தி மீனைப் பிடிக்கப் பறந்தன. ஆனால், கெழுத்தி மீனைப் பிடித்த அந்தக் கொக்கோ மனநிம்மதியாகவும், சந்தோசமாகவும் பறந்து சென்றது.

எம்மில் ஈகோ என்ற "நான்" அந்தக் கொக்கு வைத்திருந்த கெழுத்தி மீனைப் போன்றதே. ஈகோ என்ற "நான்" எங்களிடம் இருக்கும் வரை அதுவே எங் களுக்கு முக்கியமானது போலத் தோன்றும். எங்களின் மீதான மற்றயவர்களது தாக்குதல்களும் அதைநோக்கியே இருக்கும். ஆனால், நாங்கள் இந்த ஈகோ என்ற "நான்" ஐ விட்டுவிட்டால் சந்தோசம்...... நிம்மதி...... சுதந்திரம்......என்று எல்லாமே எங்களுடன் கூடவே வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை

## கொழும்பு, றோயல் கல்லூரி முன்னோடிப் பரீட்சை - 2013

## கணக்கீடு

*(கடந்த புதன்கிழமையின் தொடர்ச்சி...)*

23. கூரை ஓடுகளை உற்பத்தி செய்யும் கமால் ரூவ் டைல்ஸ் நிறுவனத்தின் தரவுகள் வருமாறு

| | 2011 | 2012 |
|---|---|---|
| விற்பனை | ரூ 5000,000 | ரூ 8000,000 |

தேறிய இலாபம் ரூ 900,000 அல் அதிகரிக்குமாயின் விற்பனைக்கான பங்களிப்பு சதவீதமாக அமைவது

1) 25% 2) 30% 3) 35% 4) 40% 5) 50%

24. கைக்கடிகாரமொன்றை தயாரிப்பதற்கான நேர்மூலப்பொருள் மற்றும் நேர்கூலி என்பவைகளுக்கான கிரயம் ரூ 160 இதற்கு மேலதிகமாக ரூ 50 தனியுரிமை கட்டணமாக செலுத்தப்படும். மேந்தலை உள்ளடக்கத்திற்கு தேவைப்படும் நேர் ஊழிய, இயந்திர மணித்தியாலங்களும் வேறுபட்ட பிரிவுகளுக்கு பின்வருமாறு

| பிரிவு | நேர் ஊழிய மணித்தியாலம் | இயந்திர மணித்தியாலம் | மேந்தலை உள்ளடக்க விகிதம் |
|---|---|---|---|
| இயந்திரம் பிரிவு | 08 | 10 | ரூ 15 (இயந்திர மணியொன்றுக்கானது) |
| பொருத்தும் பிரிவு | 10 | 05 | ரூ 12 (இயந்திர மணியொன்றுக்கானது) |
| பூரணப்படுத்தும் பிரிபு | 06 | 02 | ரூ 5 (ஊழிய மணியொன்றுக்கானது) |

உற்பத்தி பொருளுக்கான கிரயமாவது

1. ரூ.450 2. ரூ.400 3. ரூ.430 4. ரூ.350 5. ரூ.480

25. கீழ்வருவன ஊழியர் வருகை, கடமை என்பவற்றை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களாகும்.

A – வரவு பதிவுப் புத்தகம் E – வீணான நேர அட்டை
B – நேரம் பதியும் மணிக்கூடு F – வேலை அனுமதி அட்டை
C – நாளாந்த நேர அட்டை G – கைவிரல் அடையாள முறை
D – வாராந்த நேர அட்டை

மேற்கூறப்பட்ட ஆவணங்களுள் ஊழியர் வரவினை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும், ஊழியர் செயலாற்றுகையினை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் மிகச் சரியாக பிரதிபலிப்பது

| | ஊழியர் வருகை | ஊழியர் செயலாற்றுகை |
|---|---|---|
| 1 | A,B,C | D,E,F,G |
| 2 | A,B,D | C,F,E,G |
| 3 | A,B,E | C,D,F,G |
| 4 | A,B,G | C,D,E,F |
| 5 | A,B,F | C,D,E,G |

26. மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் கம்பனியொன்றுக்கான மூலப்பொருள் தொடர்பான தரவுகள் வருமாறு

- நாளொன்றுக்கான சராசரி பாவனை 1900 அலகுகள்
- நாளொன்றுக்கான உச்ச பாவனை 2600 அலகுகள்
- அதிகூடிய முதன்மைகாலம் 20 நாட்கள்
- சராசரி முதன்மைக்காலம் 15 நாட்கள்
- பொருளாதார கட்டளை கணியம் 8000 அலகுகள்

வணிகத்தின் மூலப்பொருட் உச்ச இருப்பு மட்டமாக அமைவது

1. 46000 அலகுகள்
2. 52,000 அலகுகள்
3. 48,000 அலகுகள்
4. 12,000 அலகுகள்
5. 50,000 அலகுகள்

பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி 27 ஆம், 28ஆம் வினாக்களுக்கு விடையளிக்க

- ஒரே துறையில் ஈடுபடும் 02 வணிகங்கள் தொடர்பான தரவுகள்

| | ஹைடெக் கம்பனி | மைடெக் கம்பனி |
|---|---|---|
| துவக்க கையிருப்புக்கள் | ரூ10,000 | 4,000 |
| முடிவுக் கையிருப்புக்கள் | 40,000 | 50,000 |
| விற்பனை கிரயம் | 80,000 | 108,000 |
| விற்பனை | 200,000 | 220,000 |
| பொதுச்செலவு | 60,000 | 90,000 |

27. வணிகங்களின் கையிருப்பு புரள்வு விகிதங்களாவன

1. 3.0 ம், 2.7 ம்
2. 2.7 ம், 4.0 ம்
3. 3.2 ம், 2.6 ம்
4. 2.5 ம், 4 ம்
5. 3.2 ம், 4 ம்

28. தேறிய இலாப சதவீதமும், மிக இலாபகரமான துறை எனக் கருதப்படும் கம்பனியாவது

1. 20% மும், 10% மும் - மைடெக் கம்பனி
2. 20% மும், 10% மும் - ஹைடெக் கம்பனி
3. 10% மும், 10% மும் - ஹைடெக் கம்பனி
4. 20% மும், 20% மும் - மைடெக் கம்பனி
5. 20% மும், 15% மும் - ஹைடெக் கம்பனி

29. லக்ஸ் கம்பனி "லக்ஸ்" என்ற பெயரில் சவர்க்காரமொன்றை உற்பத்தி செய்து ரூ 40/= விலையில் விற்பனை செய்கிறது. விற்பனைக்கான பங்களிப்பு வீதம் 30% நிலையான கிரயம் ரூ 1200,000 சமப்பாட்டு புள்ளியில் வெளியீட்டு அலகுகளும், அலகொன்றுக்கான மாறும் கிரயமும் முறையே

1. 100,000 அலகுகளும், ரூ 28
2. 100,000 அலகுகளும், ரூ 27.50
3. 120,000 அலகுகளும், ரூ 28.00
4. 120,000 அலகுகளும், ரூ 27.5
5. 80,000 அலகுகளும் ரூ 26.00

30. 2012ம் ஆண்டு [illegible] வணிகத்தின் கிரய தரவுகள் வருமாறு

- விற்பனை செய்த அலகுகளின் எண்ணிக்கை 10,500
- உற்பத்தி செய்த அலகுகளின் எண்ணிக்கை 11,000
- விற்பனை ரூபா 10.00
- அலகொன்றுக்கான மாறும் கிரயம் ரூபா 6.00
- மொத்த நிலையான உற்பத்தி மேந்தலைகிரயம் ரூபா 20,000

உள்ளீர்ப்பு கிரய அடிப்படையில் 2012ம் ஆண்டிற்கான இலாபமாக அமைவது

1. ரூ 21,000
2. ரூ 18,000
3. ரூ 20,000
4. ரூ 22,000
5. ரூ 25,000

வினா இலக்கம் 31 தொடக்கம் 50 வரையிலானவற்றிற்கு சுருக்கமாக விடை தருக

31. இலங்கை கணக்கீட்டு நியமம் - 8 ற்கிணங்க கணக்கீட்டு மதிப்பீடுகள் மாற்றம் (Estimate Changes) என்பதனை வரையறுக்க.

32. சிறிமால் வணிகத்தின் 31 மார்ச் 2013 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வரைபு நிதிகூற்றுக்களின் படி மொத்த இலாபம், தேறிய இலாபம் என்பன முறையே ரூ500,000 மும், ரூ 350,000 ஆகும். பின்னைய பரிசீலனையில் பின்வருவன இனங்காணப்பட்டன.

- விற்பனை பட்டியல் ரூ 15,000 ஏடுகளில் விடுபட்டிருந்தது
- ரூ 25,000 பெறுமதியான இறுதி தொக்குகள் பழுத்தடைந்து காணப்பட்டன. இவை ரூ 5,000 இற்கு விற்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.
- மின்பட்டியல் ரூ 5,678 மின் கட்டண கணக்கில் ரூ 6,578 என பதியப்பட்டிருந்தது.

பின்வருவனவற்றை கணிக்க

i. சீராக்கிய தேறிய இலாபம்
ii. சீராக்கிய மொத்த இலாபம்

33. ஐந்தொகை தினத்திற்கு பிந்திய தின நிகழ்வுகள் என்பதனை சுருக்கமாக விளக்குக

34. லில்லியும், மாலியும் இலாபநட்டங்களை 5:3 என பகிரும் பங்காளர்கள் இப்பங்குடமையில் சாலி 2/5 பங்கு இலாபநட்டத்துடன் சேர்க்கப்பட்டார். நன்மதிப்பு மூலதன கணக்கினூடாக சீராக்கப்பட்டது.

| பங்காளர் மூலதன கணக்கு | லில்லி | மாலி | சாலி |
|---|---|---|---|
| துவக்க மூலதன நிலுவை | 800,000 | 500,000 | - |
| இறுதி மூலதன நிலுவை | 925,000 | 575,000 | 300,000 |

பின்வருவனவற்றை கணிக்க

i. சீராக்கப்பட்ட பங்குடமையின் மொத்த நன்மதிப்பு தொகை யாது?
ii. பங்காளர் சாலியினால் அறிமுகப்படுத்தப்பட்ட காசு தொகை யாது?

35. செயற்பாட்டு குத்தகையுடன் ஒப்பிடும் போது நிதிக்குத்தகையின் இரு இடர் (risk) களையும், இரு வெகுமதிகளையும் (Reward) குறிப்பிடுக

1. இடர்பாடுகள் (Risk)
2. வெகுமானம் (Reward)

36. ஆல்பர்ட் என்ற தனி வியாபாரி எழுது கருவி காகிதாதி விற்பனையில் ஈடுபடும் ஒருவராவார் அவரது நிறுவன தரவுகள்

| | |
|---|---|
| 01. ஜனவரி 2012 இல் துவக்கம் மூலதனம் | ரூ 500,000 |
| 2012 ஆண்டு மேலதிக மூலதன அறிமுகம் | ரூ 300,000 |
| 2012 ஆண்டு எடுப்பனவுகள் | ரூ 50,000 |
| 2012 டிசெம்பர் 31இல் தேறிய சொத்து | ரூ 1000,000 |

01. ஜனவரி 2013 இல் மேலதிக மூலதனமாக ரூ 200,000 இனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற 2012ஆம் ஆண்டு இலாபத்தில் 50% இனை மீள முதலீடு செய்யவும் தீர்மானித்தார்.

2013.01.01 இல் மூலதன தொகையினை கணிக்க

37. ஏற்பாடுகள் (Provisions) தொடர்பான 2 வெளிப்படுத்தல்களைத் தருக

38. 1995ஆம் ஆண்டு 15ஆம் இலக்க இலங்கை கணக்கீடு கணக்காய்வு நியம சட்டத்திற்கமைய நிறுவப்பட்ட நியதிச்சபைகள் 2 இனைக் குறிப்பிடுக

39. பாதுகாப்பு எல்லை (Margin of safety) என்பனவற்றை சுருக்கமாக விளக்குக

40. துண்டுக்கூலி முறையின் 02 நன்மைகளையும், 2 தீமைகளையும் குறிப்பிடுக

41. டெலெக்ஸ் கம்பனி லிமிடெட்டின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தரவுகள்

- 50,000 சாதாரண பங்குகள் ரூ 1000,000
- பொது ஒதுக்கீடு ரூ 800,000
- நிறுத்தி வைத்த வருவாய் ரூ 500,000

கம்பனி 5000 சாதாரண பங்குகளை பங்கொன்று ரூ 25 படி விற்பனை செய்து முழுபணம் ஒரே தடவையில் வசூலிக்கப்பட்டது

கணக்காண்டின் ஆரம்பத்தில் உள்ள 5 சாதாரண பங்குகளுக்கு 1 என்ற அடிப்படையில உபகார பங்குகளை வழங்கல், இதற்கு பொது ஒதுக்கத்தில் 75% சதவீதத்தையும், மிகுதிக்கு நிறுத்தி வைத்த வருவாயினையும் பயன்படுத்தல்.

i. உபகார பங்கு வழங்கலுக்கான நாட்குறிப்பு பதிவு

ii. கணக்காண்டின் இறுதியில் உரிமைத்துவம், ஒதுக்கங்கள் என்பவற்றில் ஏற்பட்ட மாற்றங்களின் பின்னர் நிலுவைகள்

42. சில்லறை காசேட்டினை வசக்கட்டு முறைமைக்கமைய பராமரிப்பதன் நன்மைகள் 2 இனை குறிப்பிடுக

43. அர்ஜுனா லிமிடெட் பெற்ற வாடகை வருமானம் ரூ 50,000 தவறுதலாக செலுத்திய வாடகையாக புத்தகங்களில் பதியப்பட்டிருந்தது.

i. மேற் கூறப்பட்ட வழுவின் வகை யாது?

ii. திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு யாது?

44. முகாமை கணக்கீட்டின் பிரதான நோக்கம் யாது?

45. சிதுமின கொம்யூனிகேஷன்ஸ் உரிமையாளர் பிரதி பண்ணும் இயந்திரம் ஒன்றினை கொள்வனவு செய்வது தொடர்பாக பின்வரும் இயந்திரம் தொடர்பான தரவுகளை திரட்டியிருந்தது.

| | Canon Machine | Toshiba Machine |
|---|---|---|
| கிரயம் | 100,000 | 100,000 |
| எஞ்சிய பெறுமானம் | 20,000 | 30,000 |
| மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் (ஆண்டுகளில்) | 04 | 04 |
| மதிப்பிடப்பட்ட காசு உட் பாய்ச்சல் | | |
| ஆண்டு 1 | 50,000 | 20,000 |
| ஆண்டு 2 | 50,000 | 30,000 |
| ஆண்டு 3 | 30,000 | 50,000 |
| ஆண்டு 4 | 10,000 | 50,000 |

வருடாந்த காசு உட்பாய்ச்சல்களுக்கும், இலாபத்திற்குமிடையிலான வேறுபாடு பெறுமான தேய்வாகும்.

கொம்யூனிகேஷன்ஸ் உரிமையாளருக்கு எவ் இயந்திரத்தில் முதலீடு செய்யலாம் என்பதனை கணக்கீட்டு வருவாய் வீத அடிப்படையில் சிபார்சு செய்க.

46. பொறுப்புக்களின் (Liabilities) 3 பண்புகளை குறிப்பிடுக

47. போத்தீஸ் வியாபாரத்தில் 31 மார்ச் 2013 இல் ஏற்பட்ட தீ விபத்தில் பெருந்தொகையான பண்டங்கள் அழிவெய்தின. கணக்கு புத்தகங்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன

01 ஏப்ரல் 2012 தொடக்கம் 31 மார்ச் 2013 வரை விற்பனை ரூ812,500

01 ஏப்ரல் 2012 தொடக்கம் 31 மார்ச் 2013 வரை கொள்வனவு ரூ500,000

01 ஏப்ரல் 2012 இல் வணிக இருப்பு 300,000

காப்பாற்றப்பட்ட தொக்குகள் 50,000

விற்பனையில் இலாப வீதம் 20% சதவீதமாகும்.

காப்புறுதி கம்பனி சேதத்தில் 75% சதவீதத்தை ஈடு செய்வதாக உறுதியளித்தது.

தீயழிவு, காப்புறுதி என்பவற்றுக்கான குறிப்பேட்டு பதிவு

48. மூலதன பாதீட்டு நுட்பமுறையில் "மீள பெறும் காலம் முறை (Pay back period) இன் நன்மைகள் 2 இனையும், தீமைகள் 2 இனையும் குறிப்பிடுக.

49. பெறுவனவு கொடுப்பனவு கணக்கு (Receipt & Payments account) வருமான செலவு கணக்கு (Income & Expenditure account) என்பனவற்றுக்கிடையில் 2 வேறுபாடுகளை குறிப்பிடுக.

பெறுவனவு கொடுப்பனவு கணக்கு

வருமான செலவு கணக்கு

50. நிகழத்தக்க பொறுப்புக்களை (Contingent Liabilites) நிதியறிக்கைகளில் இணங்காணாமைக்கான ஏதுக்கள் 2 தருக

# கணக்கீடு - II

**முதலாம், இரண்டாம் வினாக்கள் கட்டாயமானவை.**
**எல்லாமாக 06 வினாக்களுக்கு விடை தருக**

01) வரையறுத்த பிவிதுரு கம்பனியின் 31 மார்ச் 2012 இல் உள்ளவாறான பரீட்சை மீதி அனைத்து தொகைகளும் ரூ '000' களில்

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் - 30 000 சாதாரண பங்குகள் | | 1500 |
| 20 000 முன்னுரிமை பங்குகள் | | 1200 |
| கொள்வனவுகளும், விற்பனைகளும் | 680 | 2990 |
| உட்திரும்பல்களும், வெளித்திரும்பல்களும் | 50 | 60 |
| மின்கட்டணம் | 120 | |
| விற்பனை செலவுகள் | 80 | |
| தொலைபேசி கட்டணம் | 40 | |
| வாடகையும் வரியும் | 90 | |
| வங்கிக்கடன் வட்டி | 10 | |
| அறவிட முடியாகடனும் ஐயக்கடனும் | 20 | |
| ஐயக்கடனுக்கான ஏற்பாடு – 2011.04.01 இல் | | 50 |
| இயக்குனர் கட்டணம் | 60 | |
| கணக்காய்வு கட்டணம் | 50 | |
| கடன்படுனரும், கடன்கொடுனரும் | 400 | 420 |
| உள்வந்த வண்டி கூலி | 70 | |
| 2011 ஏப்ரல் 01 இல் வணிகதொக்கு | 120 | |
| அனுமதித்த கழிவும், கிடைத்த கழிவும் | 70 | 80 |
| அச்சிடுதலும், தபால் செலவும் | 20 | |
| அலுவலக வேதனம் | 110 | |
| வருமானவரி ஏற்பாடு (2010/11) | | 60 |
| செலுத்திய வருமானவரி | 140 | |
| காணியும் கட்டிடமும் (கிரயத்தில்) (காணி ரூ 1000 000 ஆகும்) | 1600 | |
| இயந்திரங்கள் - கிரயத்தில் | 1000 | |
| மோட்டார் வாகனம் | 1800 | |
| செலுத்திய இடைகால பங்கிலாபம் - சாதாரண பங்கு | 120 | |
| முன்னுரிமை பங்கு | 60 | |
| நிலையான வைப்புக்கள் | 1110 | |
| முதலீடு – விலை கூறியவை | 610 | |
| விலை கூறாதவை | 580 | |
| 10% வங்கிக்கடன் (2011 ஜுலை 01 இல் இலங்கை வங்கி | | 320 |
| 2011 ஏப்ரல் 01 இல் தேய்மான ஏற்பாடு | | |
| - கட்டிடம் | | 160 |
| - இயந்திரங்கள் | | 100 |
| - மோட்டார் வாகனம் | | 640 |
| 12% தொகுதிகடன் - 2011 செப்ரெம்பர் 30 இல் விநியோகித்தவை | | 300 |
| வங்கி மீதி | 150 | |
| பகிராத இலாபம் | | 250 |
| பொது ஒதுக்கீடு | | 400 |
| சில்லறை வருமானம் | | 80 |
| பெற்ற பங்கிலாபம் - விலை கூறியவை | | 12 |
| விலை கூறாதவை | | 18 |
| விண்ணப்பமும் ஒதுக்கல் கணக்கு | | 120 |
| வாகன முடிவுறுத்தல் கணக்கு | | 400 |
| | 9160 | 9160 |

**மேலதிக தகவல்கள்**

(i) வணிக இருப்பு "முதல் வந்தது முதல் வெளியேறல்" முறையில் மதிப்பிடப்படுகிறது. 2012 மார்ச் 31 இல் வணிக கையிருப்புக்களின் கிரயம் ரூ 120,000 இவற்றில் தேறக் கூடிய நிகர பெறுமதி ரூ 100,000 ஆகும்.

(ii) 2011 டிசெம்பர் 31 இல் 3000 சாதாரண பங்குகள் பங்கொன்று ரூ 30 விலையிலும், 2000 முன்னுரிமை பங்குகள் பங்கொன்று ரூ 15 விலையிலும் பொது வழங்கீடு செய்து முழுப்பணமும் ஒரே தடவையில் பெறப்பட்டது. இத்தொகை வங்கி கணக்கிலிருந்து **விண்ணப்ப ஒதுக்கல் கணக்கீட்டு** செலவு வைத்ததை தவிர வேறு சீராக்கம் இடம் பெறவில்லை.

(iii) 2012 மார்ச் 31 இல் அட்டுறு செலவின் விபரம் வருமாறு

- மின் கட்டணம் ரூ 10000
- அலுவலக வேதனம் ரூ 25000

(iv) 2012 மார்ச் 31 இல் முற்பணமாக செலுத்திய வாடகை ரூ 15000

(v) 01 ஏப்ரல் 2009 இல் ரூ 1000000 இற்கு கொள்வனவு செய்த வாகனமொன்று 30 செப்டெம்பர் 2011இல் ரூ 400000 இற்கு விற்று பெற்ற பணம் வாகன முடிவுறுத்தல் கணக்கில் செலவு வைத்ததை தவிர வேறு சீராக்கம் இடம்பெறவில்லை.

(vi) கடன்படுனரில் 100% சதவீத ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வாடிக்கையாளர் ஒருவரின் நிலுவை ரூ 10000 அறவிட முடியாதென அறியக் கிடைத்ததுடன் மேலும் ரூ 40000 இனை அறவிட முடியாதென பதிவழிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(vii) நடைமுறையல்லா ஆதனங்களுக்கு பெறுமானதேய்வு பின்வருமாறு தாக்கல் செய்வது வழமை

கட்டடம் - 5% (கிரயத்தில்)

இயந்திரம் - 10% (குன்றும் மீதி முறையில்)

வாகனம் - 20% (கிரயத்தில்)

(viii) சென்ற ஆண்டிற்கான வருமான வரி பொறுப்பு ரூ 40000 என இணங்கிக்கொண்டு இவ்வருடம் செலுத்தப்பட்டதுடன் இவ்வருடம் (2011/12) ற்கான வருமானவரி பொறுப்பு ரூ 60000 என மதிப்பிடப்பட்டது.

(ix) கம்பனி பிறிதொரு கம்பனியுடன் இணைந்து ரூ 2மில்லியன் பெறுமதியான கட்டடமொன்றை அமைப்பதற்கு கைச்சாத்திட்டுள்ளது.

(x) இயக்குநர் சபையின் முன்மொழிவுகள் பின்வருமாறு

- பொது ஒதுக்கீட்டுக்கு ரூ 100000 மாற்றுதல்
- சாதாரண பங்குகளுக்கு பங்கொன்றுக்கு ரூ 6/= படியும் முன்னுரிமை பங்குகளுக்கு பங்கொன்றுக்கு ரூ 8/= படியும், ஆண்டிறுதி பங்கிலாபத்தை பிரேரித்தல் (கணக்காண்டில் பொது வழங்கீடு செய்யப்பட்ட பங்குகள் இவ்வருட பங்கிலாபத்துக்கு உரித்துடையவையல்ல

*(மிகுதி நாளை...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தின் தோல்வி மீண்டும் நிரூபணம்...!

வெலிவேரியாவில் பொது மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், உள்ளூரில் மட்டுமன்றி சர்வதேச அளவிலும் அரசாங்கத்துக்கு எதிரான கண்டன அலைகளைத் தோற்றுவித்துள்ளன. இந்தத் தாக்குதலை நியாயப்படுத்தும் வகையில், அரசாங்கம் பல்வேறு காரணங்களை முன்வைக்கத் தொடங்கியுள்ளது.

வெலிவேரிய மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில், இறப்பர் கையுறை தொழிற்சாலைக் கழிவுகள், குடிநீரில் கலப்பது தொடர்பாக எழுந்த சர்ச்சைதான், அங்கு மூன்று பேரின் மரணத்துக்குக் காரணமாகியுள்ளது. அந்தப் பகுதி மக்கள் சுத்தமான குடிநீருக்காக போராடக் கிளம்பியபோது, அதை அடக்குவதற்கு கொமாண்டோக்களை உள்ளடக்கி இராணுவ அணிகள் களமிறக்கப்பட்டது தான், பெரும் சர்ச்சையாக வெடித்துள்ளது.

இத்தகையதொரு சம்பவத்தை தெற்கிலுள்ள மக்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை என்பதை உணர முடிகிறது. அதாவது இலங்கை இராணுவத்தினரே, தம்மீது துப்பாக்கிச் சூடு நடத்துவார்கள் என்று அங்குள்ள மக்கள் ஒரு போதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

கடந்தகாலங்களில் ஜே.வி.பி. கிளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கைகளின்போது, இராணுவத்தினர் தெற்கிலும் கூட பொதுமக்களுடன் கடும் போக்குடன் நடந்து கொண்டிருந்தாலும், அதற்குப் பிந்திய காலத்தில் நிலைமை முற்றிலும் மாறியிருந்தது.

விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான போர், சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான போராகவே பெரும்பாலானவர்களால் பார்க்கப்பட்ட நிலையில், தெற்கிலுள்ள சிங்கள மக்கள் மத்தியில் இராணவத்தினர் பெரிதும் கௌரவத்தக்குரியவர்களாக மாறினார்கள்.


புலிகளுக்கு எதிரான போர், ஜே.வி.பி. கால இராணுவத்தினரின் செயற்பாடுகளையெல்லாம் மறந்து, சிங்கள மக்கள் ஒன்றிணையக் காரணமாகியது. இராணுவத்துக்கும் தெற்கிலுள்ள மக்களுக்கும் இடையில் தோன்றியிருந்த இந்த இணக்கமான நிலை, வெலிவேரிய தாக்குதலால் உடைந்து போனது.

*1971* இலும், *1987-89* காலத்திலும், ஜே.வி.பி. கிளர்ச்சியை முறியடிக்கும் நடவடிக்கைகளில் ஆயிரக்கணக்ான சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர். அண்மையில், மாத்தளையில் இராணுவ முகாம் அமைந்திருந்த பகுதியில் ஒரு பாரிய புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட போது கூட, அதன் உண்மையை வெளிக் கொண்டு வரவேண்டும் என்று குரல் கொடுத்தவர்கள் மிகக் குறைவு. பெரும்பாலும் ஜே.வி.பி. யினர் அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் தான், அதுபற்றி விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் நடந்த படுகொலைகளாக இருந்தாலும், இப்போதைய அரசாங்கமும்கூட அதில் அக்கறை காட்டவில்லை. காணாமற்போனவர்களின் உறவினர்களே பெரியளவில் அதில் ஈடுபாடு காட்டவில்லை.

ஏனென்றால், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரும், அதில் அவர்கள் ஈட்டிய வெற்றியும், இராணுவத்தினர் மீது குற்றம் சாட்ட இடமளிக்கவில்லை. கடந்த காலத்னீத மறக்காது விட்டாலும், மன்னித்துக்கொள்ளும் அளவுக்கு சிங்கள மக்களில் அநேகரைக் கொண்டு சென்றிருந்தது.

ஆனால், வெலிவேரிய தாக்குதல் சம்பவம், இராணுவத்தினரை அவநம்பிக்கையோடு பார்க்கும் நிலையை- வெறுப்போடு நோக்கும் நிலையை உருவாக்கிவிட்டுள்ளது. வெலிவேரிய தாக்குதலை, புதுமாத்தளனுக்கும், முள்ளிவாய்க்காலுக்கும், வன்னிப் போருக்கும் ஒப்பிட்டு சிங்கள மக்கள் தெரிவிக்கும் கருத்துகளே இதற்குச் சாட்சி. இராணுவத்தினர் இந்தளவுக்கு மோசமாகவும், இழிவாகவும் நடந்து கொள்வார்கள் என்று நினைக்கவில்லை என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரரே கூறியுள்ளார். என்னறால், இது தெற்கில் எந்தளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று புரிந்துகொள்ளலாம்.



விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது, பொது மக்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதாக இராணுவத்தினர் மீது குற்றம்சாட்டப்பட்ட போதெல்லாம், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்று இராணுவத்தினரைக் காத்து நின்றவர்களில், அரசதரப்பைத் தவிர வேறு யாருமே, இப்போது அவர்களின் சார்பில் பேசவில்லை.

எல்லோருமே ஒரே குரலில், வெல்வேரிய தாக்குதல் தவறானது என்கின்றனர், மோசமாக இாணுவத்தினர் நடந்து கொண்டதாக விமர்சிக்கின்றனர். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா போன்ற இன்னும் சிலர், தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினரில் தவறில்லை என்றும் தாக்குதல் நடத்த உத்தரவிட்ட அரசாங்கமே அதற்குப் பொறுப்பு என்கின்றனர். எவ்வாறாயினும், அரசாங்கம் யார் யார் தாக்குதலுக்கு உத்தரவிட்டது என்று வெளிப்படுத்தவில்லை.



இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரிக்க, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் தயா ரத்நாயக்க உத்தரவிட்டுள்ள போதிலும், அது எந்தளவுக்கு நியாயமாக நடக்கும் என்பதில், நிறையவே சந்தேகங்கள் உள்ளன. இராணுவத்தின் இந்த உள்ளக விசாரணை குறித்து சந்தேகம் எழுப்புபவர்களும், தெற்கிலுள்ள அரசியல்வாதிகளும் கட்சிகளும் தான்.

ஆனால், இதே அரசியல் வாதிகளும் கட்சிகளும் இறுதிக் கட்டப் போரின் போது இடம் பெற்ற மீறல்கள் குறித்து, இராணுவத்தரப்பு உள்ளக விசாரணை நடத்தியபோது, அது நியாயமாக நடக்காது என்று கூறவில்லை. அது குறித்து சந்தேகம் எழுப்பவில்லை. பொது மக்களை குறிவைத்து, ஒரு போதும் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தவேயில்லை என்று, இராணுவ விசாரணை நீதிமன்றம் அறிக்கையைக் கொடுத்தபோது, அதை வாயாரப் பாராட்டியவர்கள் தான், இப்போது, இராணுவ விசாரணையில் நம்பிக்கையில்லை என்கின்றனர்.

தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்று அடிக்குமாம் என்று தமிழில் உள்ள பழமொழியைத் தான் இது ஞாபகப்படுத்துகிறது.

அதுமட்டுமல்ல, வெல்வேரிய தாக்குதல் குறித்த உள்நாட்டு விசாரணைகளில் நம்பிக்கையில்யை என்றும், சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் ஐ.தே.க.வே, கோரியிருக்கிறது. ஆனால், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. ஒருபோதுமே, வன்னிப் போரில் நடந்த மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து சர்வதேச விசாரணையைக் கோரியதும் இல்லை. அத்தகைய விசாரணைக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்ததும் இல்லை.

தாக்குதலில் ஈடுப்பட்ட படையினர், பொதுமக்கள் என்று முள்ளிவாய்க்காலுக்கும், வெல்வேரியவுக்கும் எந்த வித்தியாசமும் இருக்கவில்லை. இரண்டிலுமே, மனித உரிமை மீறல் என்ற பொதுமையே இருந்தாலும், அது வடக்கில் நிகழ்ந்ததா, தெற்கில் நிகழ்ந்ததா- சிங்களவர் மீதா, தமிழர் மீதா, என்பதை அடிப்படையாக வைத்தே, அதன் பெறுமானம் கணிக்கப்படுகிறது. போர்முடிந்து நான்கு ஆண்டுகள் கழிந்தாலும், இந்தப் போக்கு மாறவில்லை.

ஒருவகையில், சிங்கள மக்கள், தமிழர்கள் மீதான மீறல்களைக் கண்டிக்காமல் ஊக்குவித்ததன் விளைவு என்று கூட இதனைக் குறிப்பிடலாம். இன்னொரு புறத்தில், வெல்வேரிய தாக்குதலை தமிழ்க்கட்சிகள் பெரியளவில் கண்டிக்கவில்லை என்பது தவறான அணுகுமுறையாகவே பார்க்கப்பட வேண்டும்.

தமிழர்களின் உரிமைகள் எவ்வாறு மீறப்பட்டன என்ற நியாயத்தை சிங்கள மக்கள் உணரமுனையும் போது, அவர்களுடன் இணைந்து கைகோர்ப்பது தான் நியாயமானது, தமிழர்களின் பலத்தை அதிகரிக்கக் கூடியது. இந்த உண்மை, தமிழர்களால் உணரப்பட வேண்டும் சிங்களக் கட்சிகளும் தலைமைகளும் இழைத்த தவறை தமிழர்களும் இழைத்துவிடக் கூடாது.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டு கொள்ளாமலிருந்தோம் இன்று கண்டிக்கிறோம்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழர்களுக்கு எதிராக இராணுவம் மேற்கொண்ட கொடூரமான தாக்குதலை நாம் கண்டுகொள்ளாமல் இருந்ததன் பிரதிபலிப்பாகத் தான் தற்போது வெளிவேரிய தாக்குதல் இடம்பெற்றுள்ளது.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு- இராஜகிரியவிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின்தொழிற் சங்கப் பணிமனையில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சர்வாதிகாரியானஹிட்லரின்கொடுங்கோல் ஆட்சியின் கொள்கைகள் தான் மஹிந்த சிந்தனையிலும் காணப்படுகின்றன. இலங்கையில் சிறைக் கைதிகளைத் கொடுமையாகத் தாக்கியபோது அவர்கள் தமிழர்களென அமைதியாக இருந்தோம். நீர் கொழும்பில் மீனவர்கள் மீது மேற்கொள் ளப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்ட வர்கள் கத்தோலிக்கர்கள் என்று அமைதியாக இருந்தோம்.

வடக்கில் படுகொலை, சித்திரவதை நடைபெற்றபோது தமிழர்கள்தானே என்று நாம் மௌனம் காத்திருந்தோம். சிலாபம் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கொலைகள் இடம்பெற்றபோதும் நாம் சிங்கள பௌத்தர்கள் என்று அமைதி காத்திருந்தோம்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக வன்முறைகள் இடம்பெறும் போது அதற்கும் அமைதியாக இருந்தோம். இஸ்லாமியர்களுக்கு எதிராக் அநீதிகள் இடம்பெறும் போது அது முஸ்லிம்கள் என்று அமைதியாக இருந்தோம்.

ஊடகவியலாளர்களான எக்னெலிகொட, லஸந்த விக்கிரமதுங்க ஆகியோர் அரசுக்கெதிராக எழுதியமையினால் அவர்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்ற போது அலட்சியமாக இருந்தோம்.

வெலிவேரிய மக்கள் சுத்தமான குடிதண்ணீர் கேட்டு வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அரசிடம் தீர்வு கேட்டபோது இராணுவத்தை பயன்படுத்தி அப்பாவி மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் உள்ளிட்ட மக்களை அரசு கொடுமையாகத் தாக்கி அவர்களைச் சுட்டுத் தள்ளியது.

இது இலங்கை இராணுவமா அல்ல ஶ்ரீலங்கா சுதந்திர தேசியக் கட்சியின் இராணுவமா என்று கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் தனதுரையில் தெரிவித்தார். (எ-1)

# சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிப்பு

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களை கட்டுப்படுத்த நீதித்துறையை வலுப்படுத்த வேண்டியது அவசியமானது என சுட்டிக்காட்டப்படுகிறது.

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் 30 ஆண்டுகள் பழைமையானவை என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாட்சியங்கள் தொடர்பான சட்டங்களும் ஒரு நூற்றாண்டு பழைமையானது என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுரத் ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

உத்தேச சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டோரின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் ஏனைய நாடுகளைப் போன்றே நாட்டின் சட்ட விதிகளில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு இம்மாதம் 17 கப்பல்கள் வரும்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு 17 வெளிநாட்டு கப்பல்கள் இம்மாதம் வரவுள்ளதாகவும் இதுவரை 95 கப்பல்கள் அங்கு பொருட்களை ஏற்றி இறக்கியுள்ளதாகவும் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகருத்திட்ட அமைச்சர்ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

துறைமுக நெடுஞ்சாலைகள் அமைச்சில் அண்மையில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் கூறி வந்த குற்றச்சாட்டுக்கள் புஸ்வாணமாகியுள்ளன. துறைமுகம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இன்றுவரை 95 கப்பல்கள் அத் துறைமுகத்துக்கு வந்துள்ளன.

அவற்றில் 35 ஆயிரத்து 317 வாகனங்கள் தருவிக்கப்பட்டு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இம்மாதம் 17 கப்பல்கள் வருவதற்கு விண்ணப்பித்துள்ளன. அம்பாந்தோட்டை துறைமுகம் வெற்றிகரமாக இயங்கி வருகிறது. சுங்கத்தீர்வையற்ற துறைமுகமாக இத் துறைமுகம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு துறைமுகத்தை அமைக்க தாமே முதலில் திட்டமிட்டதாக சிலர் கூறி வருகின்றனர். வேறு ஒருவரின் பிள்ளைக்கு தாம் தந்தை என கூறுவது வெட்கம் கெட்ட செயலாகும்.

துறைமுக அமைச்சராக இருந்த போது 2000 ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்சவே அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற் கொண்டார்.

இதுவரை ஆட்சி செய்த ஜனாதிபதிகளில் மஹிந்த ராஜபக்ஷவினால் மட்டுமே பலமான அபிவிருத்திகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பொதுநலவாய உச்சி மாநாட்டை புறக்கணிக்கக்கோரி உண்ணாவிரதம்

## சென்னை சட்டக்கல்லூரி மாணவர்கள் களத்தில்

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாடு வேறு நாட்டுக்கு மாற்றப்பட்ட வேண்டும். அவ்வாறு இலங்கையில் நடைபெற்றால் கூட்டத்தில் பங்கேற்காமல் இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை களை வலியுறுத்தி சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் 6 பேர் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கல்லூரி வளாகத்துக்குள் நேற்று தொடக்கம் இந்த தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை மாணவர்கள் தொடங்கியுள்ளனர்.

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் நடைபெற இருக்கும் பொதுநலவாய மாநாட்டினை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும். அவ்வாறு இலங்கையில் நடைபெற்றால் கூட்டத்தில் பங்கேற்காமல் இந்தியா புறக்கணிக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட் தீர்மானத்தை மத்திய அரசு அமுல்படுத்த வேண்டும். சட்டக் கல்லூரி மாணவர் களுக்கும்தமிழக அரசின் இலவச மடிக்கணனிகள் வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி குறித்த மாணவர்கள் இந்த உண்ணா விரதப் போராட்டத்தை தொடங்கியுள்ளனர். (அ-2)

# யாழை சேர்ந்த 36 பேர் கைது

கொழும்பு ராகமையில் வைத்து யாழ்ப்பாணத்தை சேர்ந்த 36 பேர் கைது செய்யப்பட்டனர்.இவர்கள் சட்டவிரோதமாக நேற்று முன்தினம் இரவு படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவிற்கு செல்லவிருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டனர்.

இதில் மூன்று பெண்களும் 10 சிறுவர்களும் அடங்கியுள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்தே அவர்கள் தங்கியிருந்த இடம் சோதனைக்குள்ளாக்கப்பட்டது. இந்நிலையில் இவர்கள் அனைவரும் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (அ-2)




- 610 - முகம்மது நபி குர்ஆனைப் பெற்ற நாள். இது இஸ்லாமில், "லாய்லாட் ஐ-காதர்" நாள் எனப்படுகிறது.
- 955 - புனித உரோமப் பேரரசன் முதலாம் ஒட்டோ மகியார்களைத் தோற்கடித்து 50 ஆண்டுகள் போரை முடிவுக்குக் கொண்டு வந்தான்.
- 1675 - ரோயல் கிறீனிச் வானாய்வகத்துக்கான அடிக்கல் லண்டனில் நாட்டப்பட்டது.
- 1741 - குளச்சல் போர்: திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மர் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியுடனான போரில் டச்சுத் தளபதி இயுஸ்ட்டாச்சியஸ் டிலனோய் என்பவனைச் சிறைபிடித்தார்.
- 1776 - அமெரிக்காவின் விடுதலைப் பிரகடன செய்தி லண்டனைப் போய்ச் சேர்ந்தது.
- 1792 - பிரெஞ்சுப் புரட்சி: பாரிசில் தீவிரவாதிகள் ரிலெரீஸ் அரண்மனையை முற்றுகையிட்டு பதினாறாம் லூயி மன்னனைக் கைது செய்தனர்.
- 1809 - குவிட்டோ (தற்போதைய ஈக்குவடோரின் தலைநகர்) பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1821 - மிசூரி ஐக்கிய அமெரிக்காவின் 24ஆவது மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 1913 - பால்கான் போர்கள்: பல்கேரியா, ருமேனியா, சேர்பியா, மொண்டெனேகுரோ, கிரேக்கம் ஆகிய நாடுகள் புக்கரெஸ்ட் நகரில் அமைதி உடன்பாட்டை எட்டின.
- **1948 - ஜவஹர்லால் நேரு இந்திய அணு சக்திப் பேரவையை (Atomic Energy Commission) ஆரம்பித்து வைத்தார்.**
- 1990 - மகலன் விண்கலம் வெள்ளிக் கோளை அடைந்தது.
- 2000 - உலக மக்கள் தொகை 6 பில்லியனைத் தாண்டியது (www.ibiblio.org தரவின் படி).
- 2003 - யூரி மலென்சென்கோ விண்வெளியில் திருமணம் புரிந்த முதலாவது மனிதர்.
- 2006 - திருகோணமலையில் சேருவிலப் பகுதியில் தொடர்ச்சியான குண்டு வீச்சினால் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

**பிறப்பு**

- 1894 - வி. வி. கிரி, 4 ஆவது இந்தியக் குடியரசுத் தலைவர் (இ. 1980)

**இறப்புகள்**

- 1790 - பிலிப்பு தெ மெல்லோ, தமிழ் டச்சு அறிஞர் (பி. 1723)
- 1899 - சி. தியாகர், நல்லூரைச் சேர்ந்த தமிழறிஞர்
- 1980 - யாஹ்யா கான், பாகிஸ்தான் ஜனாதிபதி (பி. 1917)

**ஜவகர்லால் நேரு**



ஜவகர்லால் நேரு 1889 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி பிறந்தார். இவர் இந்தியாவின் முதல் பிரதமர் ஆவார். (தலைமை அமைச்சர்) இவர் பண்டிட் நேரு, பண்டிதர் நேரு என்றும் அழைக்கப்பெற்றார்

இந்தியா, 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றபோது அதன் முதலாவது தலைமை அமைச்சராக இவர் பதவியேற்றார். 1964 ஆம் ஆண்டு மே 27 இல், காலமானார். அதுவரை இப்பதவியை வகித்து வந்தார்.

இந்திய சுதந்திர இயக்கத்தின் முன்னோடியான நேரு, காங்கிரஸ் கட்சியினால் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1952 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றதும் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக பதவி ஏற்றார். அணிசேரா இயக்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவரான நேரு, போருக்குப் பின்னான காலத்தில் அனைத்து உலக அரசியலில் மிக முக்கிய நபரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிக நிறையுடன் பிரிட்டனில் குழந்தை

பிரிட்டனை சேர்ந்த பெண், ஸ்பெயின் மருத்துவமனையில், ஆறு கிலோ எடையுள்ள குழந்தையை பெற்றெடுத்தார்.

பிரிட்டனை சேர்ந்தவர் மரின், தற்போது ஸ்பெயினில் வசித்துவருகிறார். கர்ப்பிணியான, மரினுக்கு, பிரசவ வலி ஏற்பட்டது. இதையடுத்து, டெனியா நகரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வலி தெரியாமல் இருக்கும் ஊசி ஏதும் இவருக்கு போடப்படவில்லை. ஐந்து மணி நேரத்தில், அழகான, ஆறு கிலோ எடை கொண்ட, பெண குழந்தையை, மரின் பெற்றெடுத்தார்.

இவருக்கு பிரசவம் பார்த்த வைத்தியர் சேவியர் ரியூஸ் குறிப்பிடுகையில்,

என்னுடைய, 40 ஆண்டு கால மருத்துவப் பணியில், இவ்வளவு பெரிய குழந்தையை பார்த்ததில்லை தற்போது தாயும், சேயும் நலமாக உள்ளனர் என்றார்.



விநாயகப்பெருமானின் புனித விரதங்களுள் சதுர்த்தியும் ஒன்றாகும். ஒவ்வொரு மாதமும் சதுர்த்தி வருகின்ற போதும் ஆவணியில் வருகின்ற சதுர்த்தி இந்துக்களால் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது. குறிப்பாக இந்தியாவின் பல மாநிலங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.
அந்தவகையிலே இந்தியாவின் நீலாங்கரை கஸ்ரா கார்டன் அருகில் கிழக்கு கடற்கரை சாலையில் ஆவணிச் சதுர்த்திக்காக புதிதாக வடிவமைக்கப்பட்ட விநாயகர் சிலைகளுக்கு வர்ணம் பூசி அழகுபடுத்துகின்றனர் சிறுவர்கள்.


## பாலஸ்தீனம் - இஸ்ரேல் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை ஜெருசலேமில்

மத்திய கிழக்கு நாடுகளான இஸ்ரேல்-பாலஸ்தீனம் ஆகிய நாடுகளினிடையே சமரசம் வேண்டி அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி தொடர்ந்து முயற்சித்து வந்தார். இதன் விளைவாக இரண்டு நாடுகளின் தூதுவர்களும் கடந்த 31ஆம் திகதி வோஷிங்டன் நகரில் முதல் சுற்று பேச்சுவார்த்தையை நடத்தினர். அப்போது இஸ்ரேல் தனது நாட்டு சிறைகளில் இருக்கும் 104 பாலஸ்தீனிய கைதிகளை படிப்படியாக விடுவிக்க ஒப்புக்கொண்டது. அதன்படி முதல் பிரிவாக 26 கைதிகள் எதிர்வரும் 13ஆம் திகதி விடுவிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

தற்போது இந்தப் பேச்சுவார்த்தையின் இரண்டாவது கட்டம், மத்திய கிழக்கு நாடுகளில் இஸ்ரேல் தலைநகரான ஜெருசலேம் நகரில் 14ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க உள்துறை தகவல் பெண் அதிகாரி ஜென் சகி, மத்திய கிழக்கின் அமைதித் தூதுவர் மார்ட்டின் இண்டிக், துணை தூதுவர் பிரான்க் லோவன்ஸ்டைன் ஆகியோர் இரண்டு நாட்டுத் தூதுவர்களுடன் இணைந்து இந்த நீண்ட நாள் பிரச்சினையை சுமுகமாக முடிக்கும் விதத்தில் செயற்படுவர் என்று தெரிவித்துள்ளார். அதன்பின்னர், மற்றொரு பேச்சுவார்த்தை வெஸ்ட் பாங்க்கில் உள்ள ஜெரிக்கோ நகரில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரியும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைசும் இறுதிக் கட்ட பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் குறித்து யூத மதத் தலைவர்களுக்கு நேற்று இரவும், அரபு அமெரிக்கத் தலைவர்களிடம் இன்றும் தெரிவிக்க உள்ளனர். மேலும், இதுகுறித்த அவர்களின் புதுப்பித்த கவலைகளை அறிய வோஷிங்டனில் ஒரு சந்திப்பும் நடைபெற உள்ளது.

## 500 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த பிரான்சின் பழைமையான கோபுரம்



பிரான்சில் 500 ஆண்டுகளாக மூடிவைக்கப்பட்டுள்ள வரலாற்று பரிஸ் கோபுரமானது சுற்றுலாப்பயணிகளுக்காக தற்போது திறக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பிரெஞ்சு புரட்சியினால் செயிண்ட் ஜாக்ஸ் டி லா போச்செரி (Saint-Jacques-de-la-Boucherie) கோபுரமானது தாக்கப்பட்டது. இதனால் இந்த கோபுரத்தினை பாதுகாக்கும் பொருட்டு பொலிசாரால் மூடப்பட்டது. இந்த கோபுரமானது 62 மீற்றர் உயரமும் மற்றும் 300 படிக்கட்டுகள் கொண்டு பார்ப்பதற்கு மிகவும் அழகான தோற்றத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரமானது பரிஸ் நகரத்தின் நடுவே அமையப் பெற்றது. இக்கோபுரத்தின் உச்சியில் இருந்து நகரத்தை முழுமையாக காணமுடியும் என்பதே இதன் தனிச்சிறப்பு

நீண்ட ஆண்டுகளுக்கு பின்பு திறக்கப்பட்டுள்ளதால் சுற்றுலாப்பயணிகள் மிகுந்த எதிர்பார்ப்புடன் காணச்செல்கின்றனர். மேலும் பார்வையாளர்களின் அனுமதி சீட்டானது 6 யூரோவிற்கு விற்கப்படுகிறது.

ஆனால் இந்த நினைவுச் சின்னமானது செப்டெம்பர் 15ஆம் திகதியுடன் மூடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகத் தமிழர்களுக்காகவும் போராட்டம் நடத்தக்கூடிய ஒரே தலைவர் கருணாநிதிதான் ; குஷ்பு




ஈழத் தமிழர்களுக்காக மட்டுமல்ல, உலகத் தமிழர்களுக்காக போராட்டம் நடத்தக் கூடிய ஒரே தலைவர் கருணாநிதி மட்டுமே என்று நடிகை குஷ்பு கூறியுள்ளார். தஞ்சாவூரில் நேற்றுமுன்தினம் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க வலியுறுத்தி நடைபெற்ற டெசோ ஆர்ப்பாட்டத்துக்கு குஷ்பு தலைமை தாங்கினார்.

அப்போது அவர் அங்கு பேசுகையில்,

தமிழகத்தில் குடிபெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியவர் திமுக தலைவர் கருணாநிதிதான். அவரது முயற்சியால் தான் ஐ.நா.சபையில் ஈழத்தமிழர்களுக்காக விவாதிக்கப்பட்டு வருகிறது. இலங்கை தோன்றியது தமிழர்களால்தான். கப்பலில் சென்று முதல் முதலில் குடி அமர்ந்தவர்கள் தமிழர்கள் தான். ஆனால் அங்கு தமிழர்களுக்கு எந்த பாதுகாப்பும் இல்லை. 2 ஆம் தர குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள்.

ஈழத் தமிழர்களுக்காக 2 தடவை ஆட்சியை இழந்திருக்கிறோம். ஈழத் தமிழர்கள் மட்டும் அல்ல உலக தமிழர்களுக்காக போராட்டம் நடத்தக் கூடிய ஒரே தலைவர் கருணாநிதிதான். இலங்கையில் நடக்கும் கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது. கடலுக்கு சென்று மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை சிங்களர்கள் பிடித்து சித்திரவதை செய்கிறார்கள். அந்த மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும். ஒவ்வொரு ஈழத் தமிழர்களுக்கும் உரிமைகள் கிடைக்கும் வரை கடைசி மூச்சுவரை போராடும் தலைவர் கருணாநிதி வழியில் எங்கள் போராட்டம் தொடரும் என்றார் அவர்.

## தென்கொரியாவில் மின்சார வீதி



தென்கொரியாவில் அதி நவீன முறையில் மின்சாரத்தினால் ஆன வீதி உருவாக்கப்பட்டுள்ளது. அந்த வீதியில் மண்ணில் காந்த அலையுடன் கூடிய மின்சார கேபிள் புதைக்கப்பட்டுள்ளது.

அதன் மீது பயணம் செய்யும் போது மண்ணில் புதைக்கப்பட்ட மின் கேபிள் மூலம் பஸ்சின் பட்டரியில் மின்சாரம் சார்ஜ் ஆகும். இதன் மூலம் பஸ் இயங்கும்.

இந்த வீதியில் பயணம் செய்யும் வகையில் ஹைடெக் வசதியுடன் கூடிய பிரத்தியேக பஸ் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை கொரிய அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிபுணர்கள் வடிவமைத்துள்ளனர்.

தற்போது 2 பஸ்கள் மட்டுமே தயாரிக் கப்பட்டுள்ளன. இந்த அதி நவீன பஸ்கள் ஓடும்போது மட்டுமின்றி நிற்கும் போதும் பட்டரியில் சார்ஜ் செய்யமுடியும். அதற்கான வசதியும் செய்யப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக இன்டாங் மாவட்டத்தில் குமி என்ற இடத்தில் 12 கி.மீற்றர் நீளத்துக்கு மட்டுமே மின்சார வசதியுடன் கூடிய வீதி அமைக்கப்பட்டுள்ளது. அந்த வீதியில் போக வர என 24 கி.மீற்றர் தூரம் இந்த பஸ்கள் இயங்க உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விமானப்படையின் மீது நவநீதம்பிள்ளைக்கு நம்பிக்கை இல்லை

## அமைச்சர் கெஹலிய வருத்தம்

(கொழும்பு)

**இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு இலங்கை விமானப்படையின் விமானங்கள் மீது நம்பிக்கை இல்லையாம்; இனி நாம் என்ன செய்வது? அப்படியானால் ஐ.நா. விமானத்திலேயே வந்து வடக்கு உட்பட தேவையான அனைத்து இடங்களுக்கும் சென்று எதிர்பார்க்கும் உண்மைகளை கண்டறிய நவநீதம்பிள்ளைக்கு அரசாங்கம் இடமளிக்கும் என்று அமைச்சரவை பேச்சாளரும் ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**



இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகத்தில் வேறு எந்தவொரு நாட்டிலும் மோதல் சம்பவங்கள் இடம்பெறுவதில்லையா? வெலிவேரியவில் ஒரு சம்பவம் நடந்து முடிந்து விட்டது. இதனை மீண்டும் தூண்டி அரசியலாக்க எதிர்க்கட்சிகள் முற்படுவது நியாய மில்லை.

பொதுநலவாய மாநாட்டை பாதிக்கும் அல்லது ஐ.நா.மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக மேலும் நெருக்கடிகள் வலுவடையும் என்பதெல்லாம் உள் நோக்கங்களைக் கொண்ட பிரசாரங்கள்.

அண்மையில் வெலிவேரியவில் இடம்பெற்ற சம்பவம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தொன்றல்ல. என்றாலும் அது குறித்து அரசாங்கம் கூடிய அவதானத்தைச் செலுத்தி விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

அதேபோன்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடுகள் வழங்கவும் முன்வந்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் மாத்திரமல்ல, ஏனைய உலக நாடுகளிலும் இடம்பெறலாம். பொதுநல அமைப்பின் உறுப்பு நாடுகளிலும்கூட இடம்பெறலாம் அல்லதுஇடம்பெற்றிருக்கலாம். இதனை அரசியலாக்க முற்படக் கூடாது.

குறிப்பாக இலங்கையின் எதிர்க்கட்சிகள் வெலிவேரிய சம்பவத்தை காரணம் காட்டி பொதுநலவாய தலைவர்களின் உச்சி மாநாட்டை சீர்குலைக்கவும் ஐ.நா.மனித உரிமை பேரவைக்கு தவறான கருத்தைக்கூறவும் முற்படுகின்றன.

ஆரம்பகாலம் முதல் எதிர்க்கட்சியினர் உள்நாட்டில் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு பதிலாக சர்வ தேசத்திலேயே முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். இது அவர்களின் வாழ்நாள் பழக்கம்.

எவ்வாறாயினும் வெலிவேரிய சம்பவத்தால் பொதுநலவாய மாநாட்டுக்குஎவ்விதமானபாதிப்பும்இல்லை. அதேபோன்று ஐ.நா.வி னாலும் பிரச்சினை ஏற்படாது. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை வருவதற்கு தீர்மானித் துள்ளார். அரசாங்கம் அவரை வரவேற்கின்றது.

நவநீதம்பிள்ளை இலங்கை விமானப்படையின் விமானங்களை பயன்படுத்த அச்சம் கொள் வதாக தெரிவித்துள்ளார்.

பரவாயில்லை. அப்படியாயின் அவரது சொந்த விமானத்திலேயோ அல்லதுஐநாவின்விமானத்திலேயோ இலங்கை வந்து தனது தேடல்களை மேற்கொள்ளலாம். அரசாங் கம் அதற்கு தடைவிதிக்காது.



யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் என்பவை உண்மைகளின் பிரதிபலிப்பாகவே காணப்படுகின்றன.

ஜனநாயக ஆட்சியில் அனைத்து மக்களும் சமாதானமாக வாழும் சூழலே இன்று இலங்கையில் காணப்படுகின்றது என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# ஆட்சியில் இல்லாவிட்டாலும் தமிழர்களுக்காக டெசோ தொடர்ந்தும் பாடுபடும்-மு.க.ஸ்டாலின்

(சென்னை)

எஞ்சியுள்ள இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும். இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய (கொமன்வெத்) மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என தி.மு. க.பொருளாளர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

திருச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற டெசோ அமைப்பின் ஆர்பாட்டத்துக்கு தி.மு. க.பொருளாளர் மு.க.ஸ்டாலின் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே மேற்கண்ட வாறு வலியுறுத்தினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

டெசோ அமைப்பு ஏதோ இன்றைக்கு நேற்று உருவானதல்ல. 1984 ஆம் ஆண்டு டெசோ அமைப்பின் சார்பில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் மாநிலம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் தொடர்ச்சியாக போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு இந்த டெசோ அமைப்பை மீண்டும் புதுப்பித்து உலகம் முழுவதும் மனித உரிமைத் தளத்தில் செயற்படும் பல்வேறு அறிஞர்களை சென்னையில் ஒன்று கூட்டி இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதித்துள்ளோம்.

அதைத் தொடர்ந்து அமெரிக்கா, ஜெனீவா போன்ற நாடுகளுக்கு நானும் டி.ஆர்.பாலுவும் நேரில் சென்று ஐ.நா.பொதுச்செயலர் உள்ளிட்ட பலரையும் நேரில் சந்தித்து உலக நாடுகளின் ஆதரவைக் கோரியுள்ளோம். இதன் தொடர்ச்சியாகத் தான் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமிழர் நலனுக்காக தி.மு.க.தொடர்ந்துஉழைத்துக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால், ஆட்சியில் இருந்தபோது பிரபாகரனைக் கைதுசெய்ய வேண்டும் என சட்டப் பேரவையில் உரையாற்றிய தமிழக முதல்வர் ஜெயலலிதாதான் இப்போது இலங்கைத் தமிழர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கிறார்.

தமிழர் முழக்கத்தை வைத்து பிழைப்பு நடத்தும் சிலரும் இன்று தி.மு.கவைக்குறை சொல்கின்றனர். அரசியல்பேசவிரும்பவில்லை. எஞ்சியுள்ள இலங்கைத் தமிழர்களை காப்பாற்ற வேண்டும். இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது"என்றார். (அ-2)



கரவெட்டி பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளும் நடமாடும் சேவை அண்மையில் நடைபெற்ற போது... (படம்:- கரணவாய் செய்தியாளர்)

# அனைத்து மக்களும் ஏற்கக்கூடிய தீர்வுத்திட்டத்தை முன்வைக்குக

## டி.எம்.சுவாமிநாதன் எம்.பி.கோரிக்கை

எமது தமிழ் மக்களுக்கு தனி இராச்சியம் தேவையில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

ஏனைய இனங்களுக்கு பொதுவான சம உரிமைகள் எங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். மக்களுக்கு சொந்தமான காணிகளை படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் 5 ஆயிரம் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அனைத்து இன மக்களினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும்.

எமது பிரதேச மக்களின் காணிகள் பெருமளவில் சுவீகரிக்கப்பட்டுள்ளது. போர் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற ஆர்வம் காட்டுகின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்த அரசாங்கம் நாட்டம் காட்டத் தவறியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கை அகதிகள் 49 பேர் நாகை மாவட்டத்தில் கைது

அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக படகு மூலம் செல்ல முயன்ற இலங்கை அகதிகள் 49 பேர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாகை மாவட்டத்தின் வேளாங்கண்ணியில் இருந்து இலங்கை அகதிகள் 49 பேர் படகு மூலமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்றுள்ளனர். இந்நிலையில் அவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அவர்களிடம் நாகை குற்றப்பிரிவு பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் இருந்து அகதிகளாக சென்ற தமிழர்கள், தமிழகத்தில் உள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களே அவ்வப்போது முகாம்களில் இருந்து தப்பி அகதிகளாக சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்து வருவதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

# தமிழ் மக்கள் அபிவிருத்தியை மட்டுமே கோர வேண்டுமாம்

## அமைச்சர் பெரேரா கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளால் தமிழ்மக்கள் மனங்களில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் அதனை தமிழ் அரசியல்வாதிகள் விரும்பவில்லை என அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

இராணுவம் சாதாரண மக்களின் காணிகளை கைப்பற்றவில்லை. விடுதலைப்புலி பயங்கரவாதிகளின் காணிகளையே இராணுவத்தினர் கைப்பற்றினர். காணி ஒன்றின் உரிமையை உறுதிப்படுத்த மக்களும் செய்ய வேண்டிய பணிகள் உள்ளன.

தமிழ் மக்களை மீள்குடியேற்றுவதில் இருந்த பிரதான தடை கண்ணிவெடிகளாகும். தமிழ் மக்கள் அபிவிருத்தியை மாத்திரமே கேட்க வேண்டும் என கூறியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் காணியும் வெளிநாட்டார் வசமாக்கப்பட்டுள்ளன-ரவி எம்.பி.



(கொழும்பு)

**அரசாங்கம் காணிகளையும் கடலையும் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகருணா நாயக்க தெரிவித்துள்ளார். ஒவ்வொரு காணி அங்குலத்தையும் அரசாங்கம் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்வதுடன் கடலையும் சீனாவிற்கு விற்பனை செய்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஊடாக அரசாங்கம் 568 ஏக்கர் கடல் பரப்பை சீனாவிற்கு விற்பனை செய்யவுள்ளது. இந்த கடற்பகுதியில் 182 பில்லியன் ரூபா செலவில் மண் நிரப்பப்பட்டு, நகரமொன்று அமைக்கப்படவுள்ளது.

மக்கள் குடிநீருக்காக உயிர்துறக்கும் தருணத்தில் யார் எதற்காக இதனைச் செய்கின்றார்கள்? டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் 6.5 ஏக்கர் காணி கசினோ சூதாட்டமையத்திற்காக வழங்கப்படவுள்ளது.

ராஜகிரியவில் சதொச நிறுவனத்திற்கு சொந்தமான காணி வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

நுரைச்சோலை அனல்மின்நிலையம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 2005 ஆம் ஆண்டில் 268 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டார். அதனை இரத்து செய்து அதே ஆண்டில் மீண்டும் 568 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

இவ்வாறான ஊழல் மோசடிகளினால் யார் நன்மை அடைகிறார்கள்.

இதேவேளை, வடக்கு மக்களின் காணி உரிமைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது.

நாட்டின் ஐக்கியத்தை உறுதிப்படுத்தி நாட்டை முன்நோக்கி நகர்த்த அரசாங்கம் விரும்பவில்லை. வடக்கு மக்களின் காணி உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு காணி உரிமைகள் வழங்கப்பட்டன. கூடுதல் அதிகாரங்களை கொண்ட அரசாங்கம் காணி அதிகாரங்களை வழங்க ஏன் தயக்கம் காட்டுகின்றது.

வடக்கில் அரசாங்கம் தனக்கு தேவையான வகையில் குடியேற்றங்களை அமைத்து வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கையில் வருடாந்தம் 56 ஆயிரம் குற்றச் செயல்கள் இடம் பெறுகின்றன

## பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் கொலை, பாலியல்வல்லுறவு, கொள்ளை போன்ற பிரதானமான குற்றச் செயல்கள் தொடர்பில் 56 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு வழிமுறைகளை பின்பற்றி வருடாந்தம் மக்களிடம் இருந்து 8தொடக்கம் 9 பில்லியன் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

சமூகத்தில் ஒழுக்கம் சீர் குலைந்து போயுள்ளதால், இவ்வாறு குற்றச் செயல்கள் பெருமளவில் அதிகரித்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் பெயர் பெற்ற 43 ஆயிரத்து 723 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

56 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குற்றச் செயல்களில் இந்த நபர்களே ஈடுபட்டு வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாட்டு மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக பிரஜைகள் பொலிஸ் சேவை என்ற பெயரில் விசேட பொலிஸ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொது மக்களையும் பங்கு பெறச் செய்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றார். (அ-2)

# கோப்பாய் பிரதேசத்தில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

கபே அமைப்பின் அனுசரணையுடன் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செலர் பிரிவில் நடத்தப்படும் தேசிய அடையாள அட்டைக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செலயகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் அடையாள அட்டைக்கு புதிதாக விண்ணப்பித்தல், தொலைத்தமைக்கான விண்ணப்பங்கள். மற்றும் பழுதடைந்த அல்லது திருத்தத்திற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொலிஸ் அறிக்கை, சத்தியக் கடதாசி, முத்திரை என்பவற்றையும் இலவசமாக பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டோர் தமது பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ் உட்பட தேவையான ஆவணங்களை தயார்ப்படுத்தி வைத்திருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)




யாழ். வட இந்து மகளிர் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தால் **இந்து விழிகள் சஞ்சிகை வெளியீடு** அண்மையில் வெளியிடப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக வணிக பீட நிதிமுகாமைத்துவத்துறை தலைவர் ஆறுமுகம் சுப்பிரமணியம் பாடசாலை அதிபரிடமிருந்து சஞ்சிகையின் முதற் பிரதியை பெற்று கொள்வதை படத் தில் காணலாம்.

(படம்:- எஸ்.செல்வதீபன்)

# சுந்தரர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூர்த்தநயினார் ஆலய மண்டபத்தில் ஏ.வி. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கான சிறப்புரையை அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அசிரியர் அராலியூர் கணேச மங்கள மூர்த்தி வழங்கவுள்ளார். (அ-2)

# மடு திருத்தலத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது

(மன்னார்)

மன்னார் மடுமாதா திருத்தலத்தின் ஓகஸ்ட் மாத திருவிழாவை யொட்டி தற்போது மடு பிரதேசத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் மடு மாதா திருப்பதி திருத்தலத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், குறித்த திருவிழாவில் கலந்து கொள்வதற்காக பக்தர்கள் வருகைதந்த வண்ணமுள்ளனர். இவ்வாறு வருகை தரும் பக்தர்களின் பாதுகாப்புக்கருதி விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், வாகன சாரதிகளும் பொலிஸாரின் நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில் மடு திருவிழாவில் கலந்து கொள்வதற்காக வரும் பக்தர்களை அழைத்துவரும் வாகன சாரதிகள் மது அருந்திவிட்டு செலுத்தக் கூடா தென்பதுடன், அதிகளவான பய ணிகளையோ அல்லது பொருட்களையோ வாகனங்களில் ஏற்றக் கூடாதெனவும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன், போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் வாகனங்களை நிறுத்தக் கூடா தென்பதுடன், பழுதடைந்த வாகனங்களை பயனபடுத்தக் கூடாதெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# ஈழப் போராட்டத்தை கொச்சை படுத்துகிறது "மெட்ராஸ் கபே"

## ராமதாஸ் கண்டனம்

(சென்னை)

ஈழப் போராட்டத்தை கொச்சைப் படுத்தும் ''மெட்ராஸ் கபே'' திரைப் படத்தை தடை செய்ய வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஹிந்தி திரைப்பட நடிகர் ஜான் ஆபிரகாம் மெட்ராஸ் கபே என்ற பெயரில் ஹந்தித் திரைப்படம் ஒன்றை தயாரித்து நடித்துள்ளார்.

ஈழ ஆதரவாளர்களின் ஐயங்களுக்கு இதுவரை தெளிவான விளக்கம் எதையும் அளிக்காத நடிகர் ஜான் ஆபிரகாம் தற்போது மெட்ராஸ் கபே திரைப்படம் தமிழிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் 23 ஆம் திகதி தமிழகத்தில் வெளியிடப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

இந்தப் படத்தில் விடுதலைப் புலிகளை தீவிரவாதிகளாக சித்திரித்திருக்கிறீர்களா? என்று அவரிடம் செய்தியாளர்கள் கேட்ட போது, "விடு தலைப் புலிகளை நாங்கள் ஆதரிக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை" என்று மழுப்பலாக பதிலளித்துள்ளார்.

ஆனால், இந்தத் திரைப் படத்தின் பெரும்பகுதி இலங்கையில் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது, இலங்கையில் ராஜபக்ஷ அரசின் ஆதரவுடன் அதிக திரை அரங்குகளில் திரையிடப்படவுள்ளது என்பதிலிருந்தே இந்தப் படம் எப்படிப் பட்டதாக இருக்கும் என்பதை யூகிக்க முடியும்.

1980 ஆம் ஆண்டுகளின் இறுதியில் இந்திய அமைதிப்படை இலங்கைக்கு சென்றது முதல் 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஈழப்போர் வரை விபரிக்கும் இப் படத்தில் விடுதலைப் புலிகள் மோசமானவர்களாக சித்திரிக்கப்பட்டிருப் பதாக கூறப்படுகிறது.

ஈழவிடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையிலும் காட்சிகள் இடம்பெற்றிருப்பதாக தெரிகிறது. மொத்தத்தில் இலங்கை அரசின் பிரசாரப் படத்தை போன்று இது தயாரிக்கப்பட்டிருக்கிறது.



இலங்கையில் நடைபெற்ற ஈழப் போர், இழந்த நாட்டை மீட்பதற்காக தமிழர்கள் நடத்திய போராட்டம்; இது மிகவும் உன்னத வரலாறு ஆகும். இத்தகைய ஒரு விடுதலை இயக்கத்தை கொச்சைப்படுத்தும் வகையில் திரைப்படம் தயாரித்திருப்பது உலகம் முழுவதும் உள்ள 10 கோடி தமிழர்களை அவமதிக்கும் செயலாகும். இதை நான் கடுமையாக கண்டிக்கிறேன் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகத்தார் நாடும் பெருமைகள் வேண்டேன். உண்மை அறிவதொன்றே என் விருப்பம்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இலங்கையில் வருடாந்தம் 56 ஆயிரம் வன்செயல்கள்

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் கொலை, பாலியல் வல்லுறவு, கொள்ளை போன்ற பிரதானமான குற்றச் செயல்கள் தொடர்பில் 56 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு வழிமுறைகளை பின்பற்றி வருடாந்தம் மக்களிடம் இருந்து 8 முதல் 9 பில்லியன் ரூபாய் பணம் கொள்ளையிடப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

சமூகத்தில் ஒழுக்கம் சீர்குலைந்து போயுள்ளதால், இவ்வாறு குற்றச் செயல்கள் பெருமளவில் அதிகரித்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரட்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் பெயர் பெற்ற 43 ஆயிரத்து 723 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

56 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குற்றச் செயல்களில் இந்த நபர்களே ஈடுபட்டு வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாட்டு மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற் காக பிரஜைகள் பொலிஸ் சேவை என்ற பெயரில் விசேட பொலிஸ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களைப் பங்குபெறச் செய்து இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றார். (செ-11)

## பசு வளர்த்து பால் குடிக்கும் பண்பாட்டை விட்டோமே!

தைப்பொங்கலுக்கு மறுநாள் பட்டிப் பொங்கல் பொங்குவது தமிழ்ப் பண்பாடு.

நிறை உணவாகிய பசுப்பாலைத் தரும் பசு இனத்திற்கு நன்றி செலுத்தும் வகையில் பட்டிப் பொங்கல் ஏற்பாடெனில் எங்கள் இனத்தின் உயர்வை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது என்பது திண்ணம்.

பசுப்பால் நிறைவுணவு மட்டுமல்ல. அது இறை வழிப்பாட்டின் அபிஷேகத்துக்குரியதாகவும் கருதப்படுகின்றது.

இதன் காரணமாக பசுமாடு வளர்ப்பதை சமய வாழ்வாகக் கருதிய தமிழினம் இன்று நியுசிலாந்து நாட்டின் புட்டிப்பாலுக்காகக் காத்திருக்கும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மாடு வளர்ப்பது நாகரிகமானதல்ல என்ற நிலைப்பாட்டில் பசுப்பாலை இழந்த நாம், இப்போது நஞ்சு கலந்த புட்டிப்பாலையே பருகிவருகிறோம் என்ற உண்மையை உணர்ந்துள்ளோம்.

என்ன செய்வது மாடு என்றாலே செல்வம் என்று பொருள் தந்த தமிழ் மொழி எங்களைப் பார்த்து கண்ணீர் வடிக்கிறது.

வீட்டுக்கொரு பசுவளர்த்தால் எங்கள் பிள்ளைகள் தூய ஆவின் பாலைக் குடித்து மகிழ்ந்திருப்பர். உடல் உறுதியைப் பேணியிருப்பர்.

ஆனால் மாடு வளர்ப்பது கௌரவமல்ல என்ற ஆணவத்தால் புட்டிப்பாலுக்கு அதிக விலை கொடுத்தது மட்டுமன்றி நஞ்சு கலந்த பால் மாவை கரைத்து எங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்தோமே என்று ஏங்கவும் வைக்கும்.

மாப்பாலிலும் நஞ்சு என்பதை நினைக்கும் போது எங்கள் முன்னோர்களின் வாழ்வியலில் இருந்த பட்டிப்பொங்கலும் பசுவைச் செல்லமாக போற்றிய பாங்கும் ஆழமான கருத்தை அள்ளி வீசுகிறது.

ஓ! எங்கும் எதிலும் நஞ்சென்றால் எங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகும். ஆகையால் அன்புக்குரியவர்களே! வீட்டுக்கொரு பசு வளர்க்கும் விரதத்தை இன்றிலிருந்து ஆரம்பிப்போம்.

எங்கள் வீட்டுப் பசுப்பாலை எங்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்து அவர்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த சத்தியம் செய்வோம்.

கூடவே, தீவகத்திலும் வன்னிப்பெருநிலப் பரப்பிலும் உரிமை கோருவாரின்றி பட்டிபட்டியாக அலைகின்ற பசுக்களை வீட்டுக்கொரு பசு வளர்ப்போம் என்ற திட்டத்தின் கீழ், பகிர்ந்து கொடுத்துப் பசுப்பாலின் உற்பத்தியைப் பெருக்குவோம்.

இதற்கு அந்தந்த பிரதேச சபைகளும் பிரதேச செயலகங்களும் கூட்டிணைந்து செயற்றிட்டங்களை வகுத்தாக வேண்டும்.

பொருளாதார அபிவிருத்தி கருதி புள்ளி விபரம் எடுக்கின்ற இந்த வேளையில் கட்டாக்காலிகளாக அலைகின்ற பசுக்களை – இடபங்களை பகிர்ந்து கொடுக்கும் திட்டத்தை இதனோடு நடைமுறைப்படுத்தினால் நஞ்சு கலந்த புட்டிப்பாலை பருகும் பரிதாபத்திலிருந்து எங்கள் சமூகத்தை கொஞ்சம் கொஞ்சமாகவேனும் மீட்டெடுக்கலாம் என்பது மறு இல்லாத நம்பிக்கை.

## வண்ணப் பொழுது நடன, நாடகம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை – யாழ்ப்பாணம் திருமறைக்கலா மன்றங்கள் இணைந்து வழங்கும் வண்ணப் பொழுது எனும் சிறார்களின் நடன, நாடக நிகழ்வுகள் இன்று சனிக் கிழமை மாலை 6.15 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யுனிசெப்பின் வடமாகாண வலய கிளிநொச்சி அலுவலக தலைமை அதிகாரி பிரகாஷ்டுலாகர் கலந்து கொள்ளவுள்ளார். (செ-5)

## மகோற்ஷவம் ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு அருள்மிகு பத்திரகாளி அம்பிகா சமேத வீரபத்திரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்ஷவ திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30க்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 17ஆம் திகதி சனிக் கிழமை மாலை 3.30க்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை இரவு 8.00 மணிக்கு சப்பறமும் இடம்பெறவுள்ளது.

அத்தோடு 19ஆம் திகதி திங்கட் கிழமை காலை 10.30க்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செய்வாய்க்கிழமை காலை 10.40க்கு தீர்த்தமும் 21ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத்திருவிழாவுடன் மகோற்ஷவம் நிறைவடையவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (செ-9,29)

***************************

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் மகோற்ஷவம் நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இம் மகோற்ஷவ தினங்களில் தினமும் மாலை மகாபாரதம் என்னும் இசைப் பேருரையை 6.30 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு காணகதாவாரிதி பிரம்மசிறி சிவ. வை.நித்தியானந்த சர்மா வழங்கவுள்ளார். (செ-5)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

**09.08.2013க்கான வினாவும் விடையும்:-**

**வினா:- விபூதி தரிப்பதன் (பூசுவதன்) பயன்கள் எவை?**

**விடை:**
- சிவசின்னங்களுள் ஒன்று (இந்துவென்ற அடையாளம்)
- என்றோ ஒருநாள் எமது உடலும் எரிக்கப்பட்டு நீறாகும் என்கின்ற நிலையாமைத் தத்துவத்தைக் குறிக்கும்.
- தரித்தவருக்கும் தரித்திருப்பவரை காண்பவருக்கும் இறை சிந்தனையை ஏற்படுத்தும்.
- தலைப்பகுதியிலுள்ள தேவையற்ற நீரை உறிஞ்சி பல நோய்களுக்கு நிவாரணியாக உள்ளது.
- சூரியனிலிருந்து வரும் ஆபத்தான புற ஊதாக் கதிர்த்தாக்கத்திலிருந்து தோலைப்பாதுகாக்கும்.
- விபூதி தரித்திருந்தால் நாம் ஒழுக்கமாக இருக்கவேண்டும் என்ற மனக்கட்டுப்பாட்டை ஏற்படுத்தும். தன்னம்பிக்கையை வளர்க்கும்.

10.08.2013: **வினா:- சேவையைச் செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?**

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) மாலை 4 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்

இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### இலட்சியத்தில் உறுதிவேண்டும்



❁ சுயநலநோக்கத்துடன் செயற்படும்போது நம் ஆற்றல் அனைத்தும் சிதறி வீணாகின்றன. ஆற்றல் உங்களிடம் விரும்பி வருவதற்கான வழி சிறிதும் இல்லை.

❁ உங்கள் இதயத்தில் ஒரு வெட்டவெளி இருப்பதாக நினையுங்கள். அதில் சுடர் ஒன்று ஒளிவீசிப் பிரகாசிப்பதாக எண்ணி தியானத்தில் ஆழ்ந்து விடுங்கள்.

❁ மனம் என்னும் கடிவாளத்தை உறுதியாகப் பிடித்து உடலையும் புலன்களையும் நல்வழியில் நடத்திச் செல்வதே தவம்.

❁ ஒருமுகத்தன்மையுடன் ஒரு செயலில் ஈடுபடப் பழகினால் உடலுக்கு புத்துணர்வு உண்டாகும்.

❁ சிறிது நேரம் பழகினாலும்கூட நல்லவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். அந்தத் தொடர்பால் பிறவிக் கடலைக் கடக்கும் வழி கிடைக்கும்.

❁ ஒரு குறிக்கோளைத் தேர்ந்தெடுங்கள். அதைப்பின்பற்றுங்கள். முடிவை எட்டும் வரை விட்டு விடாதீர்கள். இலட்சியத்தில் உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்




நீங்கள் ஆன்மீகப் பாதையில் முன்னேறிச் செல்லும்போது ஒரு நிமிடம் நீங்களே கடவுள் என்றும் அடுத்த நிமிடமே இல்லை என்றும் கண்டுபிடிப்பீர்கள். சில காலத்திற்குப் பின்னர் என்ன நிகழும் என்றால் உண்மையிலேயே நீங்களும் கடவுளும் ஒன்றேதான் என்று உணர்வீர்கள். சிலநேரங்களில் அந்த ஐக்கிய நிலை இருக்கும். சிலநேரங்களில் பிரிவு உணர்வு இருக்கும். இதுபோன்ற சமயங்களில்தான் நீங்கள் மற்றவர்களுக்குப் பெரும் உதவியாக இருக்க முடியும். நீங்கள் வாழும் காலத்திலேயே இதை அடைய முடியும். அடைந்தவர்கள் இருக்கிறார்கள். ஒரு சிலராவது அடையாத ஒன்றைப் பற்றி நான் பேசுவதே இல்லை. அதனால்தான் ஐக்கிய நிலையைப் பற்றிப்பேசி வருகிறோம். நீங்களும் தெய்வமும் ஒன்றேதான். நீங்கள் தான் உண்மையிலேயே கடவுள் என்று நிதர்சனமாகக் கண்டுபிடிப்பீர்கள். காலம் செல்லச் செல்ல கடவுளுடன் ஐக்கியமாகும் அனுபவம் நீண்ட நேரங்களுக்கு நீடிக்கும். நீங்களே அம்மா பகவானாகவோ அருட்பெருஞ் ஜோதியாகவோ கடவுளாகவோ அல்லது கடவுளை நீங்கள் எவ்வாறு அழைக்க விரும்புகிறீர்களோ அதுவாகவே ஆகிவிடுவீர்கள். அது உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு இருக்கும். மேலும் ஆழமாகச் செல்லும்போது உங்கள் உருவமும்கூட மாறுவதற்கு வாய்ப்புண்டு. இவைகளுக்கு முடிவே கிடையாது. வெகு இயற்கையாகத் தானாகவே நடக்கும் நிகழ்வுகள் இவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வபுர கிராம மக்களை கவனிப்பார் யாரோ?

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள செல்வபுர கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.**



கடந்த 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மேற்குறித்த கிராமத்தில் 410 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

கடற்றொழில் மற்றும் விவசாயத்தை தமது வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டு வருகின்ற இம் மக்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் அல்லலுற்ற வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் உள்ள 25 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் கூட இல்லாமையால் கஷ்டத்தை எதிர் நோக்குகின்றனர்.

இங்குள்ள 75 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் தேவையாக உள்ளது. அத்துடன் சுனாமி அனர்த்தம் மற்றும் போரினால் சேதமடைந்த 40 வீடுகள் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

ஒரு அங்கத்தவர்களை கொண்ட 70 குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றன. இவர்களில் 7 குடும்பங்களுக்கே வீடு நிர்மாணிப்பதற்கு ஒரு இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கு எவ்வித உதவிகளும் வழங்கப் படவில்லை.

இக்கிராமத்தில் உள்ள வீதிகள் அனைத்தும் புனரமைக்கப்படாமையால் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர்.

37 குடும்பங்களுக்கு காணி இல்லை. 40 முன்னாள் போராளிகள் வசிக்கின்றபோது 15 பேருக்கே கடன் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இங்கு ஊனமுற்றவர்கள் 47 பேர் வாழ்ந்து வருகின்றபோது ஒரு சிலருக்கே 3 ஆயிரம் ரூபா கொடுக்கப்பட்டு வருகின்றது.

59 கணவனை இழந்தவர்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் இவர்களுக்கு எதுவிதமான உதவிகளும் வழங்கப்படவில்லை.

இங்குள்ள இந்துக் கோவில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் என்பன போரால் சேதமடைந்து காணப்படுகின்றன.

கமக்கார அமைப்பு கட்டடம், கடற்றொழிலாளர் சங்கம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், கிராம அபிவிருத்தி சங்கம், முதியோர் சங்கம், விளையாட்டுக்கழகம் ஆகியவற்றுக்கு நிரந்தர காணி மற்றும் கட்டடம் என்பன இல்லை.

இந்து மயானம், விளையாட்டு மைதானம் என்பன புனரமைக்கப் படாத நிலையில் உள்ளன. 35 குடும்பங்கள் மலசலகூட வசதி இன்றியும் 25 குடும்பங்கள் மின்சார வசதி இன்றியும் வாழ்ந்து வருகின்றன.

110 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை. கடற்றொழிலாளர்கள் 25 பேருக்கு கடற்றொழில் உபகரணங்கள் எவையும் வழங்கப்படவில்லை.

எனவே, தமது நிலையை கருத்திற் கொண்டு துறைசார்ந்த அதிகாரிகள் உதவ முன்வரவேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர்.

(ம-267)

## மின்விளக்குகள் இன்மையால் சிரமம்

வவுனியா கண்டிவீதியில் இருந்து சிந்தாமணி பிள்ளையார் கோவில் செல்லும் வீதியில் மின் விளக்குகள் இன்மையால் பொது மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுப்பதாக தெரிவிக்கின்றனர்.

மேற்குறித்த பகுதியில் மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் பெரும் சிரமங்கள் ஏற்படுவதுடன் பாரிய கற்பாறைகள் இவ்விடத்தில் காணப்படுவதனால் சமூகத்துக்கு ஒவ்வாத பல நடவடிக்கைகளும் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் மதுபாவனை உட்பட பல்வேறு சொல்லத்தகாத செயற்பாடுகளும் இப்பகுதியில் இடம்பெறுவதால் உரிய தரப்பினர் மின்விளக்குகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-266)

## வடிகான்களை துப்புரவு செய்ய கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள வடிகான்கள் துப்புரவு செய்யப்படாமையால் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த பகுதியிலுள்ள வடிகான்கள் துர்நாற்றம் வீசுவதால் அப்பகுதியால் பயணம் செய்யும் பயணிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் அசுத்தமான காற்றை சுவாசிக்க வேண்டிய நிலையுள்ளது.

இது தொடர்பில் உரியவர்களிடம் முறையிட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(ம-266)

## மதுராநகர் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டது

(பூந்தோட்டம்)

மதுராநகர் கிராமத்திற்கு சுமார் 8 வருடங்களின் பின்னர் மின்சாரம் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

சிறி ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப. உதயராசா, மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியுடன் நடத்திய பேச்சுக்களின் ஏற்பாட்டில் இக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என மதுராநகர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்தில் மின்சாரமின்மை தொடர்பில் பல ஆண்டுகளாக இப்பகுதி மக்கள் அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் சிறி ரெலோ கட்சியின் முயற்சியால் மின்சாரம் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மின்சாரம் வழங்கும் செயற்பாட்டை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன், சிறி ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப. உதயராசா, கிளிநொச்சி பிராந்திய பிரதம மின் பொறியியலாளர் எஸ். பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(ம-266)




## உரம் கடத்திய இருவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு

அரசினால் மானியமாக வழங்கப்பட்ட ஒரு தொகை உர வகைகளை லொறியில் கடத்தி சென்ற இருவரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

அரசினால் மானியமாக வழங்கப்பட்ட ஒரு தொகை உரவகைகளை லொறியில் கடத்தி சென்ற வேளையில் மாங்குளம் பொலிஸார் அதனை கைப்பற்றி இரு சந்தேக நபர்களையும் மன்றில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி மேற்குறித்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

அரசினால் வழங்கப்பட்ட உரங்களை கூடுதல் விலைக்கு வேறு நபர்களுக்கு விற்பனை செய்யும் பொருட்டே கொண்டு சென்றதாக பொலிஸார் மன்றுக்கு தெரிவித்தனர்.

உரம் சம்பந்தமான பெறுமதி அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

(அ-ம)

## முல்லையில் வைத்திய விடுதிகள் திறந்து வைக்கப்படவுள்ளன

(முல்லைத்தீவு)

முல்லை.மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட வைத்திய நிபுணர் விடுதி, வைத்தியர்களுக்கான விடுதி, மருத்துவ தாதிகளுக்கான விடுதி என்பன இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ள இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் தலைவரும் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ மேற்குறித்த கட்டடங்களை திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் மருத்துவ தாதிகளுக்கான விடுதி 35 மில்லியன் ரூபா செலவிலும் அமெரிக்க நிறுவனத்தின் நிதியுதவியுடன் வைத்திய நிபுணர் விடுதி 35 மில்லியன் ரூபா செலவிலும் வைத்தியர்களுக்கான விடுதி 25 மில்லியன் ரூபா செலவிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-267)

## வீதிகளை புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுங்கள்

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட 336 வீதிகளில் 43 வீதிகளே புனரமைக்கப்பட்டுள்ளதாக பயணிகளும் அப்பகுதி மக்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.



கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மேற்குறித்த பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களில் 12 ஆயிரத்து 600 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் வீதிகள் புனரமைக்கப் படாதுள்ளமையால் பயணிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு புனரமைக்கப்படாத வீதிகளை புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)



பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரர் (சிவன் கோவில்) ஆலய வருடாந்த மஹோற்சவ அம்மன் தேர் உற்சவம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது...

## நாய்க்கடிக்கு இலக்கான பெண் உயிரிழப்பு

(கனகபுரம்)

நாய்க்கடிக்கு இலக்கான பெண் சிகிச்சை பலனின்றி நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் ஸ்கந்தபுரம் மணியம்குளத்தைச் சேர்ந்த ஜீவனா (வயது 34) என்ற பெண்ணே நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார்.

(ம-259)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லயனின் சுழலில் சிக்கியது இங்கிலாந்து

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4-வது ஆஸஷ் டெஸ்ட் தொடரின் முதலாம் நாள் ஆட்டநேர முடிபில் இங்கிலாந்து அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களை எடுத்துள்ளது.

அவுஸ்திரேலியா அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.


இத்தொடரின் முதல் இரண்டு போட்டிகளில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றதுடன், 3-வது போட்டி மழை காரணமாக சமனிலையானது.


இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 4-வது டெஸ்ட் போட்டி செஸ்டர் லீ ஸ்ரீட்டில் நேற்று ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் அலஸ்ரெயர் குக் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆஸி வீரர்களின் நேர்த்தியான பந்துவீச்சு சிக்கலை ஏற்படுத்தியது.

இதன்காரணமாக முன்னணி வீரர்கள் பெரிதளவில் பிரகாசிக்க முடியாமல்போக நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களை மட்டுமே எடுத்துள்ளது.





துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அணித் தலைவர் அலஸ்ரெயர் குக் 51. ஜெனதன் ட்ரொட் 49 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஆஸி அணி சார்பாக நேதன் லயன் 42 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், ரியான் ஹரிஸ் 70 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

## படைத் தரப்பினர்...

வெலிவேரிய சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள கோரிக்கை குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"வெலிவேரியவில் போராட்டம் நடத்தியவர்கள் மீது படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சூழ்நிலை தொடர்பாக படைத் தலைமையகமும், பொலிஸாரும் தனித்தனியாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸ் மா அதிபர் இலங்ககோன் படைத்தரப்பு அதிகாரிகளின் தலைவரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே, வெலிவேரியவுக்கு படையினர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவசரகால சூழ்நிலையில் படைத்தரப்பினரை நிறுத்துவது தொடர்பான நடைமுறையே இதன்போது பின்பற்றப்பட்டது. ஆனால் துரதிஷ்டவசமாக அவர்கள் மீது கற்கள் வீசப்பட்டதை அடுத்தே, படையினர் பதில் தாக்குதலைத் தொடுத்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளில் எவர் மீதும் குற்றம் காணப்பட்டால், அவர் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, படையினரின் தனிப்பட்ட நடவடிக்கைகள் இலங்கையின் ஒட்டுமொத்த படைத்தரப்பின் பெயரைக் கெடுப்பதற்கு அனுமதிக்க முடியாது.

இச்சம்பவம் தொடர்பில் சர்வதே விசாரணைக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பானது, படைத்தரப்பினர் மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என விடுக்கப்படும் கோரிக்கைகளை வலுப்படுத்துவதாக உள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுற்ற பின்னர், இலங்கைப் படையினர் மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள வலியுறுத்தியவர்கள், வெலிவேரிய சம்பவத்தைப் பயன்படுத்தி தமது கோரிக்கையை நியாயப்படுத்திக் கொள்கின்றனர்.

நந்திக்கடலில் இடம்பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்டப் போருடன், வெலிவேரிய சம்பவத்தை ஒப்பிடுவதற்கு எதிர்க் கட்சிகள் கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டுள்ளன. ஆனால் இவையிரண்டுக்கும் எவ்வித ஒற்றுமையும் இல்லை" என கோத்தபாய ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார்.

(தொடர்பான [illegible]


## மலிவு விற்பனை

| அலுவலகப் பொருட்கள் | கடை விலை | எமது விலை |
| --- | --- | --- |
| Excecutive மேசை | 17,390/= | 12,290/= |
| Excecutive கதிரை | 7,500/= | 5,250/= |
| சுழல் கதிரை | 3,850/= | 2,310/= |
| விரிவுரை மண்டபப் பொருட்கள் | கடை விலை | எமது விலை |
| Box செற் | 16,500/= | 13,200/= |
| விரிவுரையாளர் கதிரை | 6,000/= | 4,200/= |
| விரிவுரையாளர் மரக்கதிரை | 4,000/= | 2,800/= |
| CD பிளேயர் | 3,200/= | 2,540/= |
| Projector | 73,500/= | 51,450/= |

தொடர்புகளுக்கு : 021 790 4941

(C-4273)


## வடக்கு வேட்பாளர்...

இராணுவத்தினரை பயன்படுத்திக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார். வடக்கில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளதாக அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் கூறி வருகின்றபோதிலும் உண்மை நிலைமை அதுவல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் நெருங்கும் தருணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அமைச்சர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் வடக்கு நோக்கிப் படையெடுத்து வாக்காளர்களின் மீது தாக்கத்தை செலுத்த முயற்சிப்பார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

சுயாதீனமானதும் நியாயமானதுமான முறையில் வடக்கில் தேர்தல் நடத்தப்பட்டால் நிச்சயம் தோற்போம் என்பதை அரசு விளங்கிக கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## தமிழ் மக்களின்...

பயனில்லை.காணிப் பிரச்சினை குறித்து விசாரணை நடத்த சுயாதீன ஆணைக்குழு உருவாக்கப்பட வேண்டும்.

முகாம்களை அமைப்பதற்காக தமிழ் மக்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு இன்னமும் நட்டஈடு வழங்கப்படவில்லை.

வடக்கில் அரசாங்கம் புதிய கலாசாரமொன்றை திணிப்பதற்கு முயற்சிக்கின்றது. தமிழ் மக்கள் மீது பௌத்த தர்மத்தை திணிக்க முயற்சிக்கின்றது என விஜித ஹேரத் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## ரூ.10 இலட்சம்...

ஒரு இலட்சம் ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (செ-6)

## நாடு திரும்புமாறு...

கேள்விக்கு பதில் வழங்கும் போது உயர்ஸ்தானிகர்,

எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு சுயவிருப்புடன் பிரித்தானியாவில் இருந்து வெளியேறும் சட்டவிரோத குடியேறிகள் மீண்டும் பிரித்தானியாவுக்குள் பிரவேசிப்பதற்கு விதிக்கப்படுகின்ற தடையின் காலம் குறைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (செ-11)

## பிரபாகரனின்...

அந்தப் பெயருக்கு ஏதோவொரு சக்தி இருக்கிறது என்பது புலனாகிறது.

எந்த மதகுருவும் இனவாதமாகச் செயற்பட்டால் அது தவறு என்று பிக்கு எம்.பி. இங்கு கூறினார். அப்படியென்றால் வாருங்கள் நான் காட்டுகின்றேன்.

யார் இனவாதத்துடன் செயற்படுகின்றார்கள் என்பதை மட்டக்களப்பில் பௌத்த பிக்கு ஒருவர் புத்தர் சிலை வைக்க முயற்சித்தமைக்கு எதிராக பொலிஸாரின் அனுமதி பெற்று நாம் ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டபோது இராணுவத்தினரோ மக்களின் வீடுகளுக்குச் சென்று அதில் கலந்து கொள்வதைத் தடுத்து நிறுத்தும் முகமாகச் செயற்பட்டனர்.

இன்று இது ஜனாதிபதியின் கீழ் இயங்கும் நாடாக இருக்கிறதா அல்லது அவரது தம்பியின் கீழ் இயங்கும் நாடாக இருக்கிறதா?

ஜனாதிபதியின் கீழ் இயங்கும் நாடு என்றால் சட்ட ஒழுங்கு பொலிஸாரிடம் இருக்க வேண்டும். அது இராணுவத்தினரிடம் இருப்பதுதான் இங்கு பிரச்சினையாக இருக்கிறது.

அங்கு சிவில் நிர்வாகம் இராணுவத்தினரின் கைகளில் இருக்கிறது. வட மாகாண தேர்தலில் செப்டெம்பர் 21-ம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக வெற்றி பெறவுள்ள நிலையில் இராணுவத்தினர் அத்துமீறி அரசுக்காகப் பிரசாரம் செய்கின்றனர்.

இதேநேரம் அரசாங்கத்துக்கு வக்காளத்து வாங்கும் அஸ்வர் எம்.பி., தமிழ் சமூகத்தினரைத் தரக் குறைவாகப் பேசுகிறார். முஸ்லிம் சமூகத்துக்காகவும் நாம் தான் பேசிக கொண்டிக்கின்றோம். அஸ்வர் தேவையென்றால் அரசாங்கத்துக்கு வக்காளத்து வாங்கட்டும். ஆனால் தமிழ் மக்கள் பற்றிப் பேசுவதற்கு அஸ்வருக்கு அருகதையில்லை என்றார். (செ-11)


## மரண அறிவித்தல்

### டெனிஸ் இராயப்பு

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் தும்பளை தெற்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட டெனிஸ் இராயப்பு நேற்று (09.08.2013) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டெனிஸ் - ஆனாசி தம்பதிகளின் அன்பு மகனும், திரேசம்மாவின் அன்புக் கணவரும், மேரி மில்ஜேற், மேரி கதலின், மேரி மாக்கிறேற், மேரி வினி விக்ரர் (ஆசிரியை- யாழ்.கலட்டி றோ.க.த.க.பாடசாலை), அன்ரனி (சமூர்த்தி முகாமையாளர் -பிரதேச செயலகம், பருத்தித்துறை), இஸ் டெனிஸ்லாஸ் (அலுவலக பணியாளர், பிரதேச செயலகம், பருத்தித்துறை), மேரி திரேசா ஆகியோரின் அன்புத் தந்தையும், வேதநாயகம் (அண்ணாவியார்), மரிய பெர்னாண்டோ, செல்வநாயகம் (ஓய்வுபெற்ற இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்), றேமண்ட் (பகுதி அபிவிருத்தி முகாமையாளர் - யூனியன் அசூரன்ஸ்), மேரி ஷாமினி (ஆசிரியை, யாழ்.கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை), பவதாரணி ஆகியோரின் அன்பு மாமனும், டெனிஸ் மேரி (சுருக்கெழுத்தாளர் - நீதிமன்றம், யாழ்ப்பாணம்), கபிரியேல் பீற்றர் (தொழில்நுட்ப இணைப்பாளர் ADB, JSPR) ஜோன் மேரி (மாணவன் - யாழ். பல்கலைக்கழகம்), லியோனி, றேமிகன், தஜிகன், ஜெமிகன், லஜிகன், லுஜித் ஆகியோரின் அன்புப் பேரனும், டொனி கிறிஸ்ரினின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.08.2013) சனிக்கிழமை கற்கோவளம், செபஸ்ரியார் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பருத்தித்துறை, முனைசேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(35800)

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகை மீனவர்....

மீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது இலங்கை கடற்படையினரால்கைது செய்யப்பட்டனர். அவர்கள் இலங்கை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மீனவர்களை கைது செய்த இலங்கை கடற்படையை கண்டித்தும், அவர்களை உடனடியாக விடுதலை செய்ய கோரியும் நாகை தாலுகாவில் உள்ள 8 மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு மீன்பிடி க்க செல்லாமல் கடந்த 1-ம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று 9-வது நாளாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க கோரி நடுக்கடலில் 7 இடத்தில் படகுகளில் கறுப்பு கொடி கட்டி, மீனவர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.(செ-11)


### காணவில்லை

30.07.213 அன்று இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட தனியார் சிவப்பு நிற சொகுசு பஸ்ஸில் எழுதுமட்டுவாழில் இருந்து பயணித்தபோது திருமதி புஸ்பராணி நவரத்தினம் ஆகிய எனது கைப்பையினுள் இருந்த பெறுமதி மிக்க நகைப்பொதி ஒன்று காணாமல் போயுள்ளது. விபரமறிந்தவர்கள் தொடர்புகொள்ளுமாறு மன்றாட்டமாக கேட்டுக்கொள்கின்றேன்.

**தொடர்புகொள்ளவேண்டிய தொ.பே: 0775533092**

### இலவச மருத்துவ ஆலோசனை

Northern Central Hospitals

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (11.08.2013) அன்று நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையில் வைத்தியர்களால் சகல நோய்களுக்குமான இலவச மருத்துவ ஆலோசனை வழங்கும் மருத்துவ முகாம் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளதால் ஆலோசனை பெறவிரும்பும் அனைவரும் சமூகமளித்து இந்த இலவச வரப்பிரசாத்தைப்பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படு கின்றனர். மேலதிக சிகிச்சை பெற சிபாரிசு செய்ப வர்களுக்கு வைத்திய நிபுணரின் சேவையை இவ்வைத் தியசாலையில் பெற்றுக்கொள்ள பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. கீழ்க் காணும் தொலைபேசி எண்ணுடன் மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.

(சி-4248)

பணிப்பாளர்,

**நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை,**

342, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.இல.: 021 221 9988. 021 221 9977. 021 222 2263.

திருகோணமலை - யாழ்ப்பாணம்

### திருமறைக் கலாமன்றங்கள்

இணைந்து வழங்கும்

## வண்ணப் பொழுது

(சிறார்களின் நடன, நாடக அளிக்கைகள்)

காலம் : இன்று 10.08.2013 சனிக்கிழமை

நேரம் : மாலை 6.15 மணி

இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு

பிரதம விருந்தினர்

**திரு. பிரகாஷ் டுலாகர்**

தலைமை அதிகாரி, வட மாகாண வலய அலுவலகம்,

யுனிசெப், கிளிநொச்சி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி,

யாழ்ப்பாணம்.

(C-4271)

### அதி சொகுசு வாகனங்கள் வாடகைக்கு



**NPC Rent A Car**

அரச, தனியார் அலுவலகங்கள், வீட்டில் இடம்பெறும் நற்காரியங்களுக்கு அதி நவீன சொகுசு கார்கள், வான்கள், பிக்கப்புகள்,4X4 வாராந்த, மாதாந்த, வருட அடிப்படையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். **NPC ENTERPRISES**

**0 718 486 160**

### தேவை

கணனி தரவு இயக்குநர் **DATA OPERATOR**

பெண் / வயது 35 இற்குள் Female/ Under 35 age

A/L சித்தியடைந்த, கணனியில் நல்ல வேலை அனுபவம், யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பேன்ற இடங்களில் வசிப்பவர்கள் மாத்திரம் CVயுடன் ஞாயிறு (11.08.2013) பி.ப. 3 மணிக்கு நேரில் வரவும்.

(C-4270)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 2219016, 0215689090

| நியூசிலாந்தில் படிக்க | UK இல் படிக்க |
| --- | --- |
| ☑ IELTS தேவையில்லை | IELTS அவசியம் ⊘ |
| ☑ பகுதிநேர வேலைவாய்ப்பு உண்டு | பகுதிநேர வேலைவாய்ப்பு இல்லை ⊘ |
| ☑ 2 வருடத்தில் PR பெற அருகதை | Student Visa மூலம் சென்றால் PR பெறமுடியாது. ⊘ |
| ☑ நிரந்தர குடியுரிமை பெற்றால் ஆஸ்திரேலியா குடிபெயரலாம். | |

வங்கி வைப்பு இலவசம்

பொதுவான அம்சங்கள்..

மேற்படி இரண்டு நாட்டு விசாக்களும் நிராகரிக்கப்படக் கூடியவை.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**

(C-4261)

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 2219016, 0215689090

## கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சியும் விற்பனையும்

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதுடன் நுகர்வோருக்கு தரமான பொருட்களைப் பெற்றுக் கொள்ளச் செய்யும் நோக்குடன் வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் மேற்குறித்த கண்காட்சியையும் விற்பனையையும் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**இடம் : நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்**

**காலம் : 12.08.2013 திகதி - 05.09.2013 திகதி வரை**

**நேரம் : காலை 10 மணி - மாலை 6 மணி**

ஒழுங்கு செய்யும் நிறுவனங்கள்

* இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
* பனை அபிவிருத்திச் சபை
* தேசிய அருங்கலைகள் பேரவை
* தேசிய வடிவமைப்பு நிலையம்

மேலதிக தொடர்புகளுக்கு:

திரு.சி.சிவகெங்காதரன்,

பிரதிப் பணிப்பாளர்,

கைத்தொழில் அபிவிருத்திச் சபை,

யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2421

இக் கண்காட்சியும் விற்பனை சந்தையிலும் கலந்துகொண்டு பிரபல்யமான பொருட்களை கொள்வனவு செய்யும் வாய்ப்பினை பயன்படுத்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வே.சிவஞானசோதி

செயலாளர்,

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

(சி-4249)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.